Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 176 சுபகிருது வருடம், மாசி மாதம் 11ஆம் திகதி வியாழக்கிழமை
(23.02.2023) ஹிஜ்ரி 1444, ஜமா அதுல் ஷஃபான் - 02, 0115 886187 - பக்கங்கள் 10 விலை ரூ.50

## புத்தலவில் நிலநடுக்கம்



02 பக்கம்

## பாதுகாப்புக்காக களத்தில் படையினர்

### ஜனாதிபதி விசேட அறிவிப்பு

02 பக்கம்

# அரசுக்கு எதிராக கொழும்பில் போராட்டம்

## வீதியை மறித்து கோஷம்

02 பக்கம்



படப்பிடிப்பு : பிரதீப் தம்பரகே

### உஷ்



அமைச்சரவையில் மாற்றங்களை செய்வது தொடர்பில் ஜனாதிபதி ரணில் மீண்டும் ஆலோசித்து வருகிறார் என்கின்றன அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள்.

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், எதிர் அணியிலுள்ள சில முக்கியஸ்தர்களை இணைத்து அமைச்சரவை மாற்றத்தை செய்வதென்றும் ரணில் ஆலோசித்து வருவதாக தகவல்.

## நாட்டைக் கட்டியெழுப்ப ஒன்றிணைய வேண்டும்

### றோயல் கல்லூரி நிகழ்வில் ஜனாதிபதி ரணில் அழைப்பு



இன்னும் 25 வருடங்களில் நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுத்து, அபிவிருத்தியடைந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அனைவருக்கும் அழைப்பு விடுத்தார்.

தமது அரசியல் செயற்பாடுகளை நிறுத்திவிட்டு தன்னுடன் இணையுமாறு எவருக்கும்... 02 பக்கம்

## ஷாப்டரின் மரண விவகாரம்

### ஐவர் அடங்கிய விசேட வைத்திய நிபுணர் குழு



**அடுத்த வாரம் பெயரிடப்படுவரென நீதிமன்றம் அறிவிப்பு**

பிரபல தொழிலதிபர் தினேஷ் ஷாப்டரின் மரணம் கொலையா? தற்கொலையா? என்பது தொடர்பில் ஆராய்வதற்கு ஐவர் அடங்கிய விசேட வைத்திய நிபுணர் குழுவொன்று அடுத்தவாரம் நியமிக்கப்படுமென கொழும்பு மேலதிக நீதவான் ரஜீந்திரா ஜயசூரிய நேற்று (22) அறிவித்தார். 02 பக்கம்

## வேதனத்தைக் குறைக்கும் சுற்றறிக்கை வெளியீடு

### இரத்துச்செய்யாவிடின் பாரிய போராட்டம் வெடிக்குமென வைத்தியர்கள் எச்சரிக்கை

•கே.சுபானி



"சுகாதார ஊழியர்களின் வேதனத்தை 15 வீதத்தால் குறைக்கும், சுகாதார செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட சுற்றறிக்கையை சுகாதார அமைச்சு உடனடியாக இரத்துச்செய்ய வேண்டும். இல்லையேல் பாரிய தொழிற்சங்கப் போராட்டம் வெடிக்கும்" - என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு... 02 பக்கம்

## நாடுதழுவிய போராட்டத்தை விரைவில் முன்னெடுப்போம்

### தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் அதிகரிக்கப்படாவிட்டால் கடும் நடவடிக்கையென வடிவேல் சுரேஷ் எச்சரிக்கை

•கே.சுபானி



மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் தொடர்பில் ஜனாதிபதியோ, அரசாங்கமோ, பாராளுமன்றமோ அக்கறை கொள்ளவில்லையென குற்றஞ்சுமத்திய பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்... 02 பக்கம்

## தேர்தலை ஒத்திவைக்கக் கோரிய ரிட் மனு இன்று விசாரணைக்கு

•ம.அகிலேஸ்



நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைக்குமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் ஒருவர் சமர்ப்பித்த ரிட் மனு இன்று (23) உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. 02 பக்கம்

## நான்கில் ஒருவருக்கு நீரிழிவு



•கே.சுபானி

நாட்டில் நான்கில் ஒருவர் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், மூன்றில் ஒருவர் உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆய்வறிக்கையொன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான நீரிழிவு நோயாளர்களைக் கொண்ட நாடாக இலங்கை உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளதுடன், இலங்கையில் 23 வீதமானோர் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் உள்ளூர் ஆய்வாளர்களால் நடத்தப்பட்ட தேசிய ஆய்வில் தெரிய வந்துள்ளது. 02 பக்கம்



## அமெரிக்கப் புலனாய்வுப் பிரிவு எதற்காக வந்தது?

### விளக்கமளிக்கக் கோருகிறார் விமல் எம்.பி.

02 பக்கம்

## வடக்கு, கிழக்கு சகலருக்குமானது

### கூறுகிறார் குணவங்ச தேரர்

•நா.தினுஷா



வடக்கு, கிழக்கு என்பது குறிப்பிட்ட மக்கள் தொகுதிக்கு சொந்தமானதல்ல. நாட்டிலுள்ள சகலருக்கும் சொந்தமான பகுதியாகும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிங்கள மக்கள் மத்தியில் வரவேற்பு இல்லை. 02 பக்கம்

## இந்திய மீனவர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள்

**அந்நாட்டுடன் பேச்சுகள் இடம்பெறுவதாக அமைச்சர் அலி சப்ரி சபையில் தெரிவிப்பு**



•நா.தினுஷா

இலங்கை - இந்திய மீனவர் பிரச்சினை குறித்து, இந்திய அரசாங்கத்துடன் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருவதாகவும் இந்தியாவிலிருந்து வரும் மீனவர்களுக்கு அனுமதிப் பத்திரமொன்றை வழங்க அந்நாடு... 02 பக்கம்

## மூன்று குழந்தைகளை கைவிட்டுச் சென்ற தந்தை

### மனைவியை அழைத்துவரக் கோரி தங்காலை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு வந்தவர் கைங்கரியம்

•த.யுவராஜ்

தங்காலையிலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக அலுவலகத்திற்கு மூன்று பிள்ளைகளுடன் சென்ற தந்தை ஒருவர், வெளிநாட்டிலுள்ள தனது மனைவியை அழைத்து வருமாறு அதிகாரிகளிடம் கோரி பிள்ளைகளை அலுவலகத்திற்கு அருகில் விட்டுச் சென்றதாக தங்காலை தலைமையகப் பொலிஸார் தெரிவித்தனர். 02 பக்கம்

## அரசியல் கைதிகள் விடுதலை

•த.யுவராஜ்

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்த 04 பெண்கள் உள்ளிட்ட 21 தமிழ் அரசியல் கைதிகள் கொழும்பு நீதவான் நீதிமன்றத்தால் நேற்று (22) விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

02 பக்கம்

## மூன்று குழந்தைகளை...

அம்பலாங்கொடை பகுதியை சேர்ந்த குறித்த நபர், இந்த மூன்று குழந்தைகளுடன் அலுவலகத்திற்கு சென்று மூன்று குழந்தைகளையும் அங்கேயே விட்டுவிட்டு சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், தந்தையால் கைவிடப்பட்ட ஒரு வயது, ஆறு மற்றும் பத்து வயதுடைய மூன்று பிள்ளைகளையும் பொலிஸார் பொறுப்பேற்றுள்ளதாக தங்காலை தலைமையக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறித்த மூன்று பிள்ளைகளின் தாய் கடந்த வருடம் ஜூலை மாதம் தொழில் நிமித்தம் வெளிநாடு சென்றிருந்த நிலையில், வெளிநாடு சென்றுள்ள தனது மனைவியை அழைத்து வருமாறு கோரி அவரது கணவர் தங்காலை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் இதற்கு முன்னர் முறைப்பாடு செய்திருந்தார். முறைப்பாடு தொடர்பில் விசாரணை நடத்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## புத்தலவில் நிலநடுக்கம்...

**கெலும் குணதிலக**

மொனராகலை மாவட்டம் புத்தல மற்றும் வெல்லவாய ஆகிய பகுதிகளிலுள்ள பல கிராமங்களில் நேற்று (22) முற்பகல் நிலநடுக்கம் உணரப்பட்டதாக அந்த மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஏ.எச். ரவீந்திர குமார தெரிவித்தார். இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 3.3 ஆக பதிவாகியுள்ளதாக தேசிய புவியியல் ஆய்வு மையம் தெரிவித்தது.

நேற்று முற்பகல் 11.44 மணியளவிலேயே இவ்வாறு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. திடீர் சத்தத்துடன் கட்டடங்கள், வீடுகள் குலுங்கியதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். வீடுகள் சிலவற்றின் சுவர்களில் இலேசான விரிசல் ஏற்பட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். வெல்லவாய அஞ்சலிகம, புத்தல ஊவா பெல்வத்த மற்றும் பெல்வத்த சீனித் தொழிற்சாலை கட்டடப் பகுதியிலும் நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளது. அப்பகுதியிலுள்ள அலுவலகங்களிலும் நிலநடுக்கம் உணரப்பட்டதால் ஊழியர்கள் பதற்றத்துடன் வெளியேறியுள்ளனர்.

பாடசாலைகளில் மாணவர்கள் அச்சமடைந்து மைதானப் பகுதிக்கு வந்துள்ளனர். மொனராகலை மாவட்டத்தில் அண்மைக்காலமாக சிறு நிலநடுக்கங்கள் பதிவாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## நான்கில் ஒருவருக்கு...

இலங்கையிலுள்ள பல பல்கலைக்கழகங்கள், கொழும்பிலுள்ள மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சுகாதார கொள்கைகளுக்கான நிறுவனம் ஆகியவற்றின் ஆய்வாளர்களால் 2019ஆம் ஆண்டு நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மேற்படி நான்கில் ஒருவருக்கு அதாவது, 23 சதவீதமானோர் நீரிழிவால் பாதிக்கப்பட்டிருப்பதும், மூன்றில் ஒருவர், அதாவது 31 சதவீதமானோர் உயர் இரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருப்பதும் தெரியவந்துள்ளது. இதுகுறித்து சுகாதார கொள்கைகளுக்கான நிறுவன ஆய்வின் முதன்மை ஆய்வாளரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான டொக்டர். ரன்னன் எலியா தெரிவிக்கையில்,

அடுத்த சில தசாப்தங்களில் மில்லியன் கணக்கான இலங்கையர்கள் நீரிழிவு நோய் ஏற்படுவதைத் தடுக்க முடியாது. காரணம் நாட்டின் சுகாதார உட்கட்டமைப்பு அவ்வாறு உள்ளது. இன்னும் பல வருடங்கள் சமாளிக்க வேண்டியுள்ளது. நீரிழிவு நோயாளிகள் பலர் மருந்துகளைப் பெறுவதற்குப் போராடிக்கொண்டிருக்கும் வேளையில், சுகாதார அமைச்சின் வரவு செலவு திட்டத்தில் நிதியை பெற்றுகொடுப்பதற்காக வரிகளை அதிகரித்துள்ளது.

மேலும், அதிக எடை கொண்டவர்கள், பொருளாதார ரீதியில் நிலையானவர்கள் அல்லது நாட்டின் அபிவிருத்தியடைந்த பகுதிகளில் வசிப்போர் அதிகளவில் நீரிழிவால் பாதிக்கப்பட்டுள்ளனர். மேல் மாகாணம், யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இந்த வீதம் அதிகமாக இருப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

கொழும்பில் மூன்றில் ஒருவருக்கு (34 சதவீதம்) நீரிழிவு நோய் இருப்பதாக ஆய்வாளர்கள் மதிப்பிட்டுள்ளனர். இந்த ஆய்வின்படி ஆசியாவிலேயே அதிக நீரிழிவு நோயைக் கொண்ட நாடாக இலங்கை விளங்குகிறது.

ஐரோப்பியர்களை விட இலங்கையர்களுக்கு குறைந்த உடல் எடையில் நீரிழிவு நோய் உருவாகியுள்ளது என்றும், சாதாரண உடல் எடையில் ஐந்தில் ஒருவருக்கு (21 சதவீதம்) இலங்கையர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதாக ஆய்வு காட்டுகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகளில் உள்ளவர்களை விட நீரிழிவு நோயை உருவாக்கும் அபாயம் அதிகம் என்பதால், இலங்கையர்களாகிய நாம் விழிப்புடன் இருக்க வேண்டும்," என்றும் உடல் எடையைக் குறைத்து ஆரோக்கியமான உணவை எடுத்துக் கொள்வது கட்டாயமாகும் என டொக்டர் ரன்னன் எலியா சுட்டிக்காட்டியுள்ளார்.

## நாட்டைக் கட்டியெழுப்ப...

கூறவில்லை எனவும், மாறாக வீழ்ந்த நாட்டை மீட்டெடுக்கும் வேலைத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு போட்டி எண்ணத்தை மறந்து அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று (22) முற்பகல் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எவ்வாறான தடைகள் வந்தாலும் இந்த வேலைத்திட்டத்தை நிறுத்தப்போவதில்லை எனவும், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க தேவையான வேலைத்திட்டம் தற்பொழுது அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதார மீட்சியை உருவாக்குவதுடன் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கான பொறுப்பையும் அனைவரும் இணைந்து நிறைவேற்ற வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஒரு நாடாக நாம் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கும் நேரத்தில் நான் இன்று உங்கள் முன்னிலையில் உரையாற்றுகிறேன். கடந்த 400 வருடங்களாக நாட்டில் இப்படியொரு நிலை ஏற்படவில்லை. இன்று நமது பொருளாதாரம் முற்றிலும் வீழ்ச்சியடைந்துள்ளது. நான் இங்கு பொதுவான பொருளாதார விடயங்களைப் பற்றி பேசவில்லை. ஆனால் இந்த நிலை உங்கள் அனைவரையும் பாதிக்கிறது. எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரத் தடை மற்றும் விவசாயத்திற்கு உரம் கிடைக்காமை, வரி அதிகரிப்பு, பணவீக்கம் அதிகரிப்பு போன்ற காரணங்களால் இந்நாட்டில் ஒவ்வொரு வீட்டுக்கும் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

நான் நாட்டைப் பொறுப்பேற்றபோது, நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரமும் சரிந்திருந்தது. நான் ஜனாதிபதியாக பதவியேற்றதும், பிரதமர் தினேஷ் குணவர்தன, பிரதமர் பதவியை பொறுப்பேற்றார். முதலில் நாட்டைப் பற்றி சிந்திக்க வேண்டியது நமது கடமையாக இருந்தது. அதற்கிணங்க, நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் இலங்கையை உலகில் அங்கீகரிக்கப்பட்ட நாடாக முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கும் தேவையான எந்தவொரு முடிவையும் ஒரு வருடத்திற்குள் எடுப்பதற்கு நான் தீர்மானித்தேன் என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## பாதுகாப்புக்காக களத்தில்...

நாட்டின் பாதுகாப்புக்காக படையினரை அழைப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவு பிறப்பித்துள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் நேற்று (22) அறிவித்தார்.

பொதுப் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் 12ஆவது பிரிவின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களுக்கு அமைய நாட்டில் சமாதானத்தை உறுதிசெய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## அரசியல் கைதிகள்...

வட மாகாணம் மற்றும் கொழும்பை சேர்ந்த 21 பேரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகள் அமைப்பை மீள் உருவாக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தி, கடந்த 2014ஆம் ஆண்டு இவர்கள் கைது செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இந்திய மீனவர்களுக்கு...

பரிந்துரை செய்துள்ளதாகவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி பாராளுமன்றத்தில் நேற்று (22) தெரிவித்தார்.

அவ்வாறு அனுமதிப்பத்திரம் வழங்கும் பட்சத்தில் அதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதகங்கள் குறித்தும் கலந்துரையாடி வருவதுடன், இலங்கை கடல் வளங்களை இந்திய மீனவர்களுக்காக வழங்குவது குறித்து எந்த தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்புத் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழுள்ள இரண்டு கட்டளைகள் நேற்று பாராளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன. இதன்போது, பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்து உரையாற்றும்போதே அமைச்சர் மேற்கண்ட விடயங்களை குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் இலங்கைக்கு வந்திருந்தபோது, அவருடன் இந்த பிரச்சினை தொடர்பில் பேச்சுவார்த்தை முன்னெடுத்திருந்தோம். அதேநேரத்தில், இதன்போது மீன்பிடித்துறை அமைச்சர் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் இதுதொடர்பில் கலந்துரையாடியிருந்தோம்.

இருந்தபோதும், முதலில் வடக்கிலுள்ள மீனவர்களை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதே எங்களின் நோக்கமாகும். இரண்டாவது மீனவ வளங்களுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் அவற்றை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். மூன்றாவதாக, இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதனை எவ்வாறு செய்வது என்பதில் நீண்ட பேச்சுவார்த்தையொன்றும் அவர்களுடன் முன்னெடுக்கப்பட்டே வருகின்றோம். அதற்கமைய, இந்தியாவிலிருந்து வருபவர்களுக்கு அனுமதிப் பத்திரமொன்றை வழங்கவேண்டும் என்று அவர்கள் பரிந்துரை முன்வைத்திருக்கிறார்கள். அவ்வாறு அனுமதிப்பத்திரத்தை கொடுத்தால் அவர்கள் எவ்வளவு தூரம் வரையான கடற்பரப்புக்குள் பிரவேசிக்கலாம், அந்த அனுமதிப் பத்திரத்துக்கு பெற்றுக்கொள்ளப்படும் கட்டணத்தை எமது மீனவர்களுக்கு பிரித்துக் கொடுக்க முடியுமா?, அதனை எமது மீனவர்கள் ஏற்றுக்கொள்வார்களா? போன்ற விடயங்கள் குறித்தும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறோம்.

எமது மீனவர்களின் தேவைகளுக்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதேநேரம் இரு நாடுகளுக்கும் இடையில் பிரச்சினையை உருவாக்கவும் முடியாது. என்ன நடத்தாலும் ஒவ்வொரு நாளும் 2000 – 3000 மீன்பிடி படகுகள் வந்தவண்ணமே இருக்கின்றன. கடற்படையினரை இணைத்துக்கொண்டே இந்த பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்திருந்தோம். நடைமுறையில் இதனை முழுமையாக நிறுத்த முடியாது என்பதே கடற்படையினரின் நிலைப்பாடாக இருக்கிறது. என்றார்.

## ஷாப்டரின் மரண விவகாரம்...

இந்த நிபுணர் குழுவுக்கான வைத்தியர்களின் பட்டியல் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரால் நீதிமன்றுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நீதவான் தெரிவித்தார்.

தினேஷ் ஷாப்டரின் மரணம் தொடர்பான வழக்கு விசாரணை நீதிமன்றில் இடம்பெற்றபோதே நீதவான் மேற்படி அறிவிப்பை வெளியிட்டார். மூப்பின் அடிப்படையில் விசேட நிபுணர் குழு அடுத்தவாரம் நியமிக்கப்படுமென அவர் மேலும் தெரிவித்தார்.

## தேர்தலை ஒத்திவைக்கக்...

இந்த மனுவை விசேடமாகக் கருதி எஸ்.துரைராஜா மற்றும் ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழு முன்னிலையில் கடந்த திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஓய்வுபெற்ற கேர்னல் டபிள்யூ.எம். விஜேசுந்தர இந்த மனுவை தாக்கல் செய்திருந்தார். மனுதாரர் சார்பில் நீதிமன்றத்தில் ஆஜரான சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா, பெப்ரவரி 22ஆம் திகதி தபால்மூல வாக்களிப்பு ஆரம்ப தினமாக கருதப்பட்டபோதிலும் அது காலவரையின்றி பிற்போடப்பட்டுள்ளதால் குறித்த வழக்கை திட்டமிட்டபடியே இன்று 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியும் என அறிவித்தார். அத்துடன் விசேட வழக்காக கருதி நிர்ணயிக்கப்பட்ட திகதிக்கு முன்னதாகவே விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென முன்வைத்த கோரிக்கை மனுவை வாபஸ் பெறுவதாகவும் மன்றில் குறிப்பிட்டார்.

இந்நிலையிலேயே இந்த மனு மீதான விசாரணை இன்று இடம்பெறவுள்ளது.

## அமெரிக்கப் புலனாய்வுப்...

**நா. தினுஷா**

இலங்கைக்கு சில தினங்களுக்கு வந்த அமெரிக்காவின் விசேட புலனாய்வு சேவை பிரிவின் அதிகாரிகள் குழு, இலங்கை அரச புலனாய்வு பிரிவு அலுவலகத்துக்கு பிரவேசித்துள்ளது. இதன்போது, அரச புலனாய்வு பிரிவு அதிகாரிகளை நிராயுதபாணிகளாக்கிவிட்டு, அமெரிக்காவின் விசேட புலனாய்வு சேவை பிரிவின் அதிகாரிகள் அவர்களின் ஆயுதங்களுடன் அலுவலகத்துக்குள் பிரவேசித்துள்ளனர். எனவே, அவர்களின் விஜயம் தொடர்பான தகவல்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அல்லது பிரதமர் தினேஷ் குணவர்தன நாட்டுக்கு உடனடியாக விளக்கமளிக்க வேண்டும் என்று உத்தர லங்கா சபையின் தலைவரும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவருமான விமல் வீரவங்ச கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (22) இடம்பெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில தினங்களுக்கு முன்னர் அமெரிக்க அரச திணைக்களத்தின் அரசியல் செயற்பாடுகள் தொடர்பான செயலாளர் விக்டோரிய லூலண்ட்டின் தலைமையிலான குழுவினர் நாட்டுக்கு வருகை தந்திருந்தார்கள். அதன் பின்னர், சில தினங்களுக்கு முன்னர் இரண்டு அமெரிக்க விமானங்களினூடாக 20 பேர் அடங்கிய விசேட புலனாய்வு சேவை அதிகாரிகள் குழுவினர் சிலர் நாட்டுக்கு வருகை தந்திருந்தார்கள். அவர்கள் ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர், புலனாய்வு பிரிவின் பிரதானிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்ததாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

குறுகிய காலத்தில் அவர்கள் நாட்டிலிருந்து வெளியேறியிருந்தார்கள். அமெரிக்காவின் பாதுகாப்பு திணைக்களத்தின் பிரதானியான ஜிட் ரோயல் இந்த குழுவினருக்கு தலைமைத்துவத்தை வழங்கியிருக்கிறார். இந்நிலையில், இவர்கள் அதிவிசேட விருந்தின நுழைவாயிலினூடாகவே இவர்கள் நாட்டுக்குள் வந்திருப்பதாக எங்களுக்கு தகவல் கிடைத்துள்ளது. இந்த நுழைவாயில் எமது ஜனாதிபதியோ அல்லது வேறு நாட்டின் ஜனாதிபதியொருவரின் பயணங்களின்போதே பயன்படுத்தப்படும். எனவே, இதன்போது குடிவரவு குடியகல்வு நடவடிக்கைகள் முறையாக இடம்பெறவில்லை என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

அதேபோன்று, இவர்கள் அரச புலனாய்வு பிரிவுக்கு சென்றிருக்கிறார்கள். இந்த விசேட புலனாய்வு சேவை பிரிவு அதிகாரிகள், எமது அரச புலனாய்வு பிரிவு அதிகாரிகளின் ஆயுதங்களை எடுத்துவிட்டு அவர்களின் ஆயுதங்களுடனேயே சென்றிருக்கிறார். எங்களுக்கு கிடைத்துள்ள தகவல்களின் பிரகாரம், இவ்வாறு இலங்கைக்கு வந்த புலனாய்வு அதிகாரிகள், இலங்கை புலனாய்வு பிரிவிலிருக்கும் சகல தகவல்களையும் அமெரிக்காவின் மத்திய புலனாய்வு பிரிவுக்கு உட்படுத்தவே முயற்சிக்கிறார்கள். ஆகவே, இலங்கை புலனாய்வுக்கு கிடைக்கும் தகவல்களில் எந்த தகவல்களை வெளியிடுவது எதை வெளியிடக் கூடாது என்பதை அமெரிக்காவின் மத்திய பிரிவே தீர்மானிக்க வேண்டும் என்பதே இவர்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது.

இவ்வாறான சம்பவங்கள் 2001ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் இடம்பெற்றிருந்தது. 2004ஆம் ஆண்டு இதுபோன்ற செயற்பாடுகள் நிறுத்தப்பட்டன. எமது நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு அரசியல் மாற்றங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவ்வாறு இருக்கையில், இவர்கள் எதற்காக இலங்கைக்கு வந்தார்கள், எங்கெங்கு சென்றார்கள், யாரை சந்தித்தார்கள், என்ன பேசினார்கள், எவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன போன்ற விடயங்களை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 பேருக்கும் இந்தச் சம்பவம் தெரியாது. உயர் இரகசியத்திட்டம் என்று கூறுகிறார்களே தவிர வேறு எந்த தகவலையும் வழங்குவதாக இல்லை. எனவே, ஜனாதிபதியோ அல்லது பிரதமரோ இதுகுறித்து விளக்கமளிக்க வேண்டும் என்றார்.

## வடக்கு, கிழக்கு...

தமிழ் மக்களின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்காகவே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை கையில் எடுத்திருக்கிறார். எனவே, மீண்டும் நாட்டின் சுதந்திரத்துக்காக அனைத்து இன மக்களும் ஒன்றுபட வேண்டிய நிலைமைக்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம். இதற்காக சிறந்த பலத்தை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் போது வெளிப்படுத்துவோம் என்று நாட்டை பாதுகாக்கும் தேசிய இயக்கத்தின் தலைவர் எல்லே குணவங்ச தேரர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் பேசும்போது, அதற்கு எதிராக பல்வேறு போராட்டங்களை நாங்கள் முன்னெடுத்திருக்கிறோம். ஆனால், நாட்டில் அன்றிருந்த நிலைமை இன்று இல்லை. அன்று எதற்காகவும் போராடுவதற்கான பலம் இருந்தது. இன்றும் அந்த பலம் இருக்கிறது. இருந்தபோதும், இன்று சர்வதேசம் எமது நாட்டின் கழுத்தை முறித்துக் கொண்டிருக்கிறது என்பதே உண்மையாகும்.

ஓரிரு தினங்களுக்கு முன்னர் அமெரிக்காவிலிருந்து எமது நாட்டுக்கு இரு விமானங்களில் வந்தார்கள். பேச்சுவார்த்தை நடத்தினார்கள். திருகோணமலை துறைமுகம் தொடர்பில் இதன்போது பேசப்பட்டதாக எனக்கு தகவல் கிடைத்தது.

இந்த அனைத்து விடயங்களுக்கும் நாங்களே பொறுப்புக் கூற வேண்டும். தேசிய ரீதியில் இருக்கும் பிரச்சினையை தீர்த்துக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தோம். ஆனால், அந்த நடவடிக்கையினூடாக தலைமைத்துவத்துக்கு வந்த நபர் பின்கதவினூடாக வெளியேறினார். எமது எதிர்கால சந்ததிகளுக்காக சிறந்தவொரு எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக, மிகவும் நேர்மையான முறையிலேயே இந்த தீர்மானத்தை எடுத்தோம். இருந்தபோதும் அந்த முயற்சி தோல்வியை சந்தித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றியை தெரிவித்துக்கொள்ள வேண்டும். அதற்கு காரணம், 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை மீண்டும் கையில் எடுத்ததாலேயே நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்தோம். நாங்களும் ஒவ்வொரு புறமாக பிரிந்தே இருந்தோம். தேசிய முகாம் பிளவுபட்டுவிட்டது என்று கருதினோம். ஆனால், அவ்வாறு இல்லை. தேசிய முகாம் புத்துணர்ச்சிப் பெற்றுள்ளது. அந்த முகாம் அமைதியாக இருக்கிறது. எங்களின் பலத்தை அடுத்த பாராளுமன்றத் தேர்தலின்போதே கட்டியெழுப்புவோம். அதன்போது நாங்கள் நேர்மையாக எங்களின் நிலைப்பாடுகளை முன்வைப்போம். 13ஆவது அரசியலமைப்பு திருத்தத்துக்கு அப்பால் பல்வேறு விடயங்களில் எங்களுக்கு பிரச்சினைகள் இருக்கின்றன.

இந்தியா, வேஸ்டி அணிந்து சால்வை போர்த்தி, நெற்றியில் பொட்டு வைத்து ஒருபுறம் அவர்களின் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார்கள். மறுபுறம், அமெரிக்கா டை, கோர்ட் என்பவற்றை அணிந்து வந்து அவர்களின் கடமைகளை முடித்துவிட்டு செல்கிறார்கள்.

அறிந்த நாள் முதல் செய்யவேண்டிய சகல இழிவுகளையும், பிரச்சினைகளையும் எங்களுக்கு கொடுத்துவிட்டார்கள். இருந்தபோதும் இன்னும் நாங்கள் இருக்கிறோம். ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களை சந்திக்க வாய்ப்பு கிடைத்தது. அதன்போது, எதற்காக வடக்கு, கிழக்கு பிரதேசங்களை எங்களின் பூர்வீக இடமென்று கூறுகிறீர்கள். முழு நாடும் எங்களின் உரிமை என்று கூறுங்கள் என்று வலியுறுத்தியிருந்தேன். எதிர்காலத்தில் எங்களுக்கு பாரிய சவால் இருக்கிறது. மீண்டும் சுதந்திரத்துக்கான போராட்டத்தை முன்னெடுக்கும் கட்டாயத்திலேயே நாங்கள் இருக்கிறோம். இவர்களின் அரசியலுக்காக மக்களை சிக்கலுக்குள்ளாக்கவே முயற்சிக்கிறார்கள் என்றார்.

## நாடுதழுவிய போராட்டத்தை...

வடிவேல் சுரேஷ், அவர்களது சம்பளம் அதிகரிக்கப்படாவிட்டால் நாடு தழுவிய ரீதியில் பாரிய போராட்டம் முன்னெடுக்கப்படுமென எச்சரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டத்தின் கீழான இரண்டு கட்டளைகள் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரைநிகழ்த்தும்போதே அவர் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

மலையக மக்களின் 200ஆண்டு கால வாழ்க்கையில் இன்று பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளனர். பொருளாதார நெருக்கடி அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் மின்சாரக் கட்டண அதிகரிப்பு இவை அனைத்துக்கும் இந்த அரசாங்கம் என்ன தீர்வு வைத்துள்ளது?

இலங்கையிலேயே ஆகக் குறைந்த வருமானத்தை பெறும் மலையக மக்களுடைய சம்பள உயர்வு, நிவாரணத்துக்கு ஏதாவது தீர்வு இருக்கின்றதா? இது சம்பந்தமாக ஜனாதிபதியோ அல்லது அமைச்சரவையோ அல்லது பாராளுமன்றமோ ஏதாவது முடிவு வைத்துள்ளதா?

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் பெருந்தோட்ட கம்பனிகளுக்கும், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சுக்கும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்க வேண்டும்.

சாதாரண குடும்பம் ஒன்றின் வாழ்க்கைச் செலவு 3ஆயிரத்து 250ரூபா என பேராதனை பல்கலைக்கழக ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான நிலையில் தோட்டத் தொழிலாளர்களின் ஒருநாள் சம்பளத்தை 3 ஆயிரத்து 250 ரூபாவாக வர்த்தமானியிலே வெளியிட்டு அதனை உறுதிப்படுத்த வேண்டும்.

கம்பனிகளுக்கு வக்காளத்து வாங்குவதை விடுத்து அரசாங்கம் தோட்டத் தொழிலாளிகளின் சம்பளத்தை அந்தத் தொகைக்கு ஒப்பந்தம் மூலமாகவோ சம்பள நிர்ணய சபை மூலமாகவோ உடனடியாக உறுதிப்படுத்த வேண்டும்.

பெருந்தோட்ட மக்களின் சம்பளப் பிரச்சினை குறித்து வர்த்தமானியிலோ அல்லது பேச்சுவார்த்தையிலோ ஒரு தீர்வு எட்டப்படாத பட்சத்தில் நாடு தழுவிய ரீதியில் பாரிய வேலை நிறுத்தப் போராட்டம் வெடிக்கும் - இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அரசுக்கு எதிராக...

**நா.தினுஷா**

அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாற்பதுக்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கோட்டை பிரதான புகையிரத நிலையத்துக்கு முன்பாக நேற்று (22) இடம்பெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தின் காரணமாக ஒரு மணி நேரமாக கொழும்பின் பல்வேறு பிரதேசங்களில் வாகன போக்குவரத்து ஸ்தம்பித்திருந்தது.

மருத்துவ பீட விரிவுரையாளர் சங்கங்களின் கூட்டமைப்பு, பல்கலைக்கழக பேராசிரியர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு, இலங்கை வங்கிச் சேவை சங்கம், மின்சார சபையின் பொறியியலாளர் சங்கம், அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட தொழில்வல்லுநர்களின் தொழிற்சங்க கூட்டமைப்பு உள்ளடங்களாக துறைமுகத்தின் தொழிற்சங்கம் உள்ளிட்ட 40இற்கும் அதிகமான தொழிற்சங்கங்கள் இந்த ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவை வழங்கியிருந்தன.

புதிய வரித்திருத்தத்தை மீண்டும் வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறுகோரி தமது எதிர்ப்பை தெரிவித்து கறுப்புக் கொடிகளை ஏந்தியவண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்நிலையில், பிரதான புகையிரத நிலையத்தினூடாக காலி முகத்திடலுக்குச் செல்லும் லிப்டன் சுற்றுவட்டாரமும் முடங்கியிருந்தது. ஆர்ப்பாட்டத்தின் காரணமாக அந்த பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன் ஜனாதிபதி செயலகம் மற்றும் நிதி அமைச்சின் பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் தீர்மானத்தை மீளப் பெற்றுக்கொள்ளும் வரை தாம் ஒருபோதும் பின்வாங்கப்போவதில்லை என்பதில் உறுதியாக இருக்கிறோம். இது எங்களின் இரண்டாவது எச்சரிக்கையாகும். இதுவரையில் எந்த பதிலும் அரசாங்கத்தின் தரப்பிலிருந்து கிடைக்கவில்லை. எனவே, மார்ச் முதலாம் திகதியிலிருந்து மீண்டும் நாடு தழுவிய ரீதியில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுப்போம். ஒன்று எங்களுக்கு வெற்றிக்கிடைக்கும். அவ்வாறு இல்லாவிட்டால் அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து வெளியேற்றுவோம் என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் எச்சரிக்கை விடுத்தார்கள்.

### தேர்தல் செயலகத்துக்கு முன்பாகவும் போராட்டம்

இதேவேளை, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துமாறுகோரி சோசலிச இளைஞர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று, ராஜகிரியவிலுள்ள தேர்தல் ஆணைக்குழுவுக்கு முன்பாக இடம்பெற்றது. இதனால், அந்தப் பிரதேசத்தில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டதுடன், தேர்தல் ஆணைக்குழுவுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

மேலும், தேர்தல் ஆணைக்குழுவுக்கு செல்லும் வீதியில் யாரும் உள்நுழைய முடியாத வகையில் நீதிமன்ற உத்தரவொன்று பொலிஸாரினால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்நிலையில், ராஜகிரிய, சரண வீதி நேற்று மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இந்த ஆர்ப்பாட்டத்தின்போது, தேர்தல் காலந்தாழ்த்துவது தொடர்பான வீதி நாடகமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிட்டத்தக்கதாகும். தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட குழுவினர் ஒருபுறம் கயிற்றை இழுப்பது போன்றும், ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத் தரப்பு, அச்சகத் தலைவர் உள்ளிட்டோர் தேர்தலை நடக்கவிடாமல் மறுபுறம் கயிற்றை இழுப்பது போன்றும் இந்த நாடகம் நடித்துக்காட்டப்பட்டிருந்தது.

அதனைத்தொடர்ந்து சோசலிச இளைஞர் சங்கத்தின் தலைவர் உள்ளிட்ட மூவரடங்கிய குழுவினரை, கலந்துரையாடலுக்காக தேர்தல் ஆணைக்குழு அழைப்பு விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## வேதனத்தைக் குறைக்கும்...

உறுப்பினர் டொக்டர் வாசன் இரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பல்வேறு துறைகள் பாரிய நெருக்கடியை சந்தித்துள்ளன. இதில் சுகாதாரத்துறை தற்போது கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. முக்கியமாக பௌதீக வளங்களின் தட்டுப்பாடு, மனித வள பற்றாக்குறை போன்றவற்றால் சுகாதாரத்துறை வீழ்ச்சியடையும் அபாயமுள்ளது.

இந்நிலையில் தொழில்வல்லுநர்கள் மற்றும் வைத்தியர்கள் மீது அசாதாரண வரிக் கொள்கையானது திணிக்கப்பட்டு வைத்தியர்களின் வேதனம் குறைக்கப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடி, பணவீக்கம், அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றம் என்பவற்றால் தொழில் வல்லுநர்கள் மற்றும் வைத்தியர்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் நாளாந்த வாழ்க்கையை கொண்டுநடத்த முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இந்நிலையை கருத்திற்கொண்டு அரசாங்கம் சுகாதாரத்துறையை உயிர்ப்பாக வைத்திருப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். வெளிநாடுகளுக்கு செல்லும் வைத்தியர்களை நாட்டிலே தக்க வைத்து, அவர்களுக்கு உரியை நலன்புரிகளை உருவாக்கி, சலுகைகளை வழங்கி இந்நாட்டிலே வைத்தியர்களை தக்க வைத்து சுகாதாரத் துறையை உயிர்ப்புடன் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தோடு சுகாதார செயலாளரினால் கையொப்பமிடப்பட்ட சுற்றறிக்கை அதாவது 15 வீத வேதனத்தை குறைப்பு செய்யும் சுற்றறிக்கையை சுகாதார அமைச்சு உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும்.

சுகாதார ஊழியர்களின் வேதனம் 15 வீதத்தால் குறைக்கப்படுமாயின் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பாரிய தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளது. மீண்டும் மீண்டும் வைத்தியர் வைத்திய சேவையுடன் விளையாடாதீர்கள். அரசாங்கம் இவ்வாறு வைத்தியர்கள் மீது பாரிய சுமையை திணிக்கும் போது பாதிக்கப்படுவது பொதுமக்களே. அசாதாரணமாக வரிவசூக்கப்பட்டு, வேதனம் குறைக்கப்பட்டு தொடர்ச்சியாக அரசாங்கம் வைத்தியர்களை பிரச்சினைக்குள் தள்ளுமாக இருந்தால் வீழ்ச்சியடைவது சுகாதாரத்துறையே என்றார்.

# பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் ஆசிரியர் பற்றாக்குறையால் ஒத்திவைப்பு

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த நிலையில், சில நாட்களுக்கு பிற்போடப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பதிலளித்த பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர, விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக ஆசிரியர்கள் விண்ணப்பிக்கும் நிலை குறைவடைந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக, விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள், சில நாட்களுக்கு பிற்போகக்கூடும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், குறித்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பனவு போதுமானதல்ல என்பதால், சில ஆசிரியர்கள் அந்தப் பணிகளுக்கு விண்ணப்பிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# ஐ.எம்.எவ். உடன்படிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு




சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டவுடன் அதனை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதாகவும் அதனை நிறைவேற்றவோ அல்லது நிராகரிக்கவோ வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, நிராகரிப்பதாக இருந்தால் சம்பந்தப்பட்ட தரப்பினர் சர்வதேச நாணய நிதியத்திற்கு மாற்று யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நேற்று முன்தினம் (21) நடைபெற்ற 2023 வரி மாநாட்டில் ஆரம்ப உரை நிகழ்த்தியபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய வரிக் கொள்கையானது சாதாரண வரிக் கொள்கையன்றி மீட்பு நடவடிக்கையாகும். இந்த செயற்பாடு சீர்குலைந்தால் சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடுகளை மேற்கொள்ள முடியாத நிலை மட்டுமன்றி எந்தவொரு நாட்டுடனும் கொடுக்கல் வாங்கல் செய்யும் வாய்ப்பை இலங்கை இழக்கவும் நேரிடும்.

2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சாதாரண வரவு-செலவுத் திட்டம் அல்ல, பொருளாதாரத்தை மீட்பதற்கான நடவடிக்கையாகும்.

இலங்கை வர்த்தக சம்மேளனம் தவிர்ந்த எந்தவொரு கட்சியோ, நபரோ அல்லது நிறுவனமோ சர்வதேச நாணய நிதியத்திற்கு முன்மொழிவுகளையோ மாற்று வழிகளையோ சமர்ப்பிக்கவில்லை. எமது நாட்டின் பிரதான கடன் வழங்குநர்களான பாரிஸ் கிளப், இந்தியா மற்றும் சீனாவுடனான கடன் மறுசீரமைப்பு செயற்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இலங்கைக்கு நிதி ஒத்துழைப்பு வழங்குவதற்கு பாரிஸ் கிளப் உத்தரவாதம் அளித்துள்ளது. இந்தியா தமக்கு தனித்துவமான முறையை பின்பற்றும் அதேவேளை, சீனா அந்த முறையை இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை.

எவ்வாறாயினும், 23ஆம் திகதி (இன்று) இந்தியாவின் பெங்களூரில் நடைபெறவுள்ள ஜி-20 நாடுகளின் நிதி அமைச்சர்கள் மாநாட்டில் அவர்களின் நிலைப்பாடு குறித்து அறிவிக்கப்படும்.

2023 வரி மாநாட்டை இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது. வரிக்கொள்கை தொடர்பான நிபுணர்மட்ட கலந்துரையாடலில் இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் லக்ஷ்மன் ஆர் வட்டவல, இலங்கை பட்டய ஆளணி முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவர் கென் விஜயகுமார், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத் தலைவர் (வரி விதிப்பு) திஷான் சுபசிங்க மற்றும் வரிக் கொள்கை மற்றும் சர்வதேச விவகாரங்களுக்கான பிரதி ஆணையாளர் நாயகம் என்.எம்.எம்.மிப்லி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# மூளைச்சாவடைந்தவரால் காப்பாற்றப்பட்ட 3 உயிர்கள்

மரத்திலிருந்து விழுந்ததில் ஏற்பட்ட காயங்களினால் மூளைச்சாவடைந்த 44 வயதுடைய நபரின் மனைவி அவரது உறுப்புகளை தானம்செய்ய சம்மதித்ததைத் தொடர்ந்து பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வந்த மூவரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

முன்பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ள தனது மூன்றரை வயது மகனுக்கு பாடசாலை உபகரணங்களை வாங்குவதற்காக கிராம்பு பறிக்கச் சென்ற ஒருவர் மரத்திலிருந்து விழுந்ததாக கூறப்படுகிறது.

மெனிகின்ன உடகம பிரதேசத்தைச் சேர்ந்த உயிரிழந்த பந்துல சேனாரத்னவின் கல்லீரல் மற்றும் சிறுநீரகங்கள் வைத்தியசாலையிலுள்ள மூன்று நோயாளர்களுக்கு வெற்றிகரமாக பொருத்தப்பட்டதாக பேராதனை பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரும் சத்திரசிகிச்சை நிபுணருமான வைத்தியர் புத்திக தசநாயக்க தெரிவித்துள்ளார்.

மரத்திலிருந்து விழுந்து படுகாயமடைந்த பந்துலவின் உயிரைக் காப்பாற்ற பேராதனை போதனா வைத்தியசாலையின் வைத்தியர்கள் கடுமையாக போராடியுள்ளனர்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வந்த பந்துலவுக்கு மூளைச்சாவு ஏற்பட்டுள்ளதை உறுதி செய்த மருத்துவர்கள், கணவரின் உடல்நிலை குறித்தும், பல நோயாளிகளின் உயிரைக் காப்பாற்ற அவரது உடல் உறுப்புகளைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் அவரது மனைவிக்கு விளக்கமளித்துள்ளனர்.

இதனையடுத்து, மனைவியின் சம்மதத்தைத் தொடர்ந்து குறித்த நபரின் உடலுறுப்புகளைக் கொண்டு மூவரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது.

# தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் மாசி மாதம் 11ஆம் நாள் வியாழக்கிழமை**

**மேஷம்:** வரவுக்கேற்ப செலவுகளை குறைத்துக்கொள்வது நல்லது, பயணத்தின்போது எச்சரிக்கை வேண்டும்.

**ரிஷபம்:** பொருள் வரவும் அதனால் மன மகிழ்ச்சியும் உண்டு, உறவினர் நண்பர்களால் உதவிகள் உண்டு.

**மிதுனம்:** எதிர்பாராத வகையில் உதவிகள் கிடைக்கும், தொழில் வியாபார உயர்வுகள் உண்டு.

**கடகம்:** முழுமையான உழைப்பால் லாபம் ஈட்டுவீர்கள், எதிரிகளிடம் ஜாக்கிரதையாக இருங்கள்.

**சிம்மம்:** பேச்சைக் குறைத்துக்கொள்ளும் அளவுக்கு நன்மை. புதிய முயற்சிகள் எதுவும் வேண்டாம்.

**கன்னி:** பெண்களால் நன்மைகள், லாபங்கள் உண்டு, கூட்டு வியாபார நன்மைகள், லாபங்கள் உண்டு.

**துலாம்:** தேவைக்கேற்ப பண வருவாய் அமையும், முக்கிய கடனை இன்று அடைப்பீர்கள்.

**விருச்சகம்:** உடல் அசதி, நோயால் சற்று மந்த நிலையை அனுபவிப்பீர்கள், குடும்ப சுகம் உண்டு.

**தனுசு:** தாயாரின் உடல் நிலை தொடர்பாக கவனம் செலுத்துங்கள், வாழ்க்கை முன்னேற்ற ஏற்பாடுகளைச் செய்வீர்கள்.

**மகரம்:** எதையும் தைரியமாகத் துணிந்து செய்வீர்கள், நினைத்த பணத்தொகை உங்கள் கரங்கிட்டும்.

**கும்பம்:** உரையாடும்போது வார்த்தைகளை கவனமாக பிரயோகியுங்கள், தனச் சேதம் உண்டு.

**மீனம்:** எதிர்பாராத வகையில் பரிசுப் பொருட்கள் கிடைக்கப் பெறுவீர்கள், வீண் மனக்குழப்பம் வேண்டாம்.

**திதி** : சதுர்த்தி பி.இ.1.34 பின் பஞ்சமி

**நட்சத்திரம்** : ரேவதி பி.இ.3.44 வரை பின் அச்சுவினி

**யோகம்** : சித்தாமிர்த யோகம் (சுப காரியம் நன்மை)

**வார சூலை** : தெற்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப.11.28 - 12.28 மணி வரை

**ராகு காலம்** : 1.58 - 3.28 மணி வரை

**எமகண்டம்** : 6.28 - 7.58 மணி வரை

**குளிகை** : 9.28 - 10.58 மணி வரை

**சந்திராஷ்டமம்** :சிங்க ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிஷ்டம்** : பூசம், ஆனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** : சதுர்த்தி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325**
**078-6759739**

# தேர்தலை நடத்த ஆணைக்குழுவுக்கு பணம் அனுப்பிய வாக்காளர்கள்



உள்ளூராட்சித் தேர்தலுக்குத் தேவையான பணத்தை தேர்தல் ஆணைக்குழுவிற்கு வழங்கும் நோக்கில் பாதுக்க பிரதேசத்திலுள்ள வாக்காளர்கள் சிலர் ஆணைக்குழுவின் தலைவருக்கு பாதுக்க தபால் நிலையத்தின் ஊடாக நேற்று (22) 'மணி ஆர்டர்' அனுப்பியுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவரின் பெயருக்கு நூறு ரூபாவிலிருந்து ஐநூறு ரூபா வரையான பணத்தை அனுப்பிவைத்தனர்.

அரசியலமைப்பு ரீதியாக தேர்தல் என்பது மக்களின் அடிப்படை உரிமை என்பதால் தேர்தலை நடத்தி மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும், அவர்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க அரசாங்கத்திடம் பணம் இல்லை என்பதால் அவர்கள் சம்பாதித்த பணத்தை அனுப்பி மக்களின் உரிமைகளை பாதுகாக்க வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

# தொழிற்சாலை இயந்திரத்தில் சிக்கி தொழிலாளியொருவர் உயிரிழப்பு

கொட்டதெனியாவ பிரதேச தொழிற்சாலை ஒன்றின் இயந்திரத்தில் சிக்கி தொழிலாளி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற குறித்த விபத்தில் மத்தியதலாவ பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

கொட்டதெனியாவ, களுஅக்கல பிரதேசத்தில் உள்ள தனியார் தொழிற்சாலை ஒன்றில் இயந்திரம் இயக்கும் குறித்த தொழிலாளி, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பழுதடைந்த இயந்திரத்தை பரிசோதித்துக்கொண்டிருந்தபோது இயந்திரம் மீண்டும் இயங்கியதில் அதில் சிக்கி உயிரிழந்தாரென பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மொட்டுக் கட்சியின் கைப்பாவையே ஜனாதிபதி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சாடல்



தமக்கு விசுவாசமாக வாக்களிக்கும் மொட்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிறந்த பாதுகாப்பு, அவர்களின் வீடுகளுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான நட்டஈடு, பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடியும்வரை பாராளுமன்றத்தை கலைக்காமல் இருத்தல் ஆகிய 3 கொள்கை ரீதியான வாக்குறுதிகளின் பிரகாரமே தற்போதைய ஜனாதிபதி ஆட்சிக்கு வந்துள்ளார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

நொச்சியாகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் ஆணையின்றி மொட்டுவின் கைப்பாவையாக நியமிக்கப்பட்டுள்ள தற்போதைய ஜனாதிபதி, வாக்குறுதிகளை மக்களுக்காக முன்வைக்காமல் மொட்டு உறுப்பினர்களுக்கு மாத்திரமே இத்தகைய வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்.

மக்கள் ஆணையும், மக்கள் நம்பிக்கையும் இல்லாத இந்த அரசாங்கத்திடம் தான்தோன்றித்தனமான அரசியலில் ஈடுபட்டு தேர்தலை ஒத்திவைக்க வேண்டாம் என்றும் மக்களின் தேர்தல் உரிமையில் தலையிட்டால் அதற்கு எதிராக வீதியில் இறங்குவோம் என்றும் இந்தத் தேர்தல் உரிமையை ஒத்திவைக்க ஆதரவளித்த அனைவரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

# மின்சார சபை ஊழியர்களை கல்லால் தாக்க முயன்றவர் கைது

அகலவத்தை பகுதியில் வீதி ஒன்றின் மின்சாரக் கட்டமைப்பில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறை சரிசெய்யச் சென்ற மின்சார ஊழியர்களை கல்லால் தாக்க முற்பட்ட நபர் ஒருவர் நேற்று முன்தினம் (21) கைதுசெய்யப்பட்டதாக அகலவத்தை பொலிஸார் தெரிவித்தனர்.

அகலவத்தை பிராந்திய மின்சார சபையினர் மின்சாரக் கட்டணத்தை அதிகரித்ததாக குற்றம் சுமத்தப்பட்டு மின்சார ஊழியர்கள் மற்றும் அவர்களது உத்தியோகபூர்வ வாகனம் மீது குறித்த நபர் கல்லால் தாக்க முயற்சித்துள்ளார்.

இது தொடர்பில் மின்சார ஊழியர்கள் அகலவத்தை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, அகலவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் தரிந்து ஹெட்டியாராச்சி அகலவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த சந்தேக நபரை கைதுசெய்துள்ளனர்.

# செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட 18 பேரின் வழக்கு ஒத்திவைப்பு


யாழ்ப்பாணத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருகை தந்தபோது, எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டமைக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்ட 18 பேருக்கு எதிரான வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கடந்த 11ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற சுதந்திர தினக் கொண்டாட்டத்திற்கு எதிராக யாழ். நகரில் போராட்டம் நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் 18 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் அன்றைய தினம் இரவு யாழ். மேலதிக நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டமையை அடுத்து, 18 பேரையும் பிணையில் செல்ல அனுமதித்த யாழ்ப்பாண மேலதிக நீதவான் நேற்று (22) வழக்கை ஒத்திவைத்தார்.

அதனடிப்படையில் நேற்று (22) குறித்த வழக்கு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது ஜூன் மாதம் 14ஆம் திகதிக்கு வழக்கை நீதவான் ஒத்திவைத்தார்.

# டிஜிட்டல் தராசு பயன்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து கொட்டியாகலையில் போராட்டம்



தேயிலை கொழுந்தை அளவிடுவதற்கு டிஜிட்டல் தராசை பயன்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, பொகவந்தலாவை பகுதியில் நேற்று (22) ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கொட்டியாகலை தொழிற்சாலைக்கு முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முற்பகல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

டிஜிட்டல் தராசை பயன்படுத்துவதன் ஊடாக தமக்கு அநீதி இழைக்கப்படுவதாக குறித்த தோட்ட மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

# கசகஸ்தான் - மத்தல விமான சேவைகள் மார்ச் 5 முதல் ஆரம்பம்

கசகஸ்தானின் மிகப்பெரிய விமான சேவை நிறுவனமான SCAT Air, மார்ச் 05ஆம் திகதிமுதல் இலங்கைக்கான தனது சேவைகளைத் தொடங்கும் என்று இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் (CAASL) தெரிவித்துள்ளது.

கசகஸ்தானின் அல்மாட்டியிலிருந்து ஹம்பாந்தோட்டையில் உள்ள மத்தல சர்வதேச விமான நிலையத்திற்கு SCAT விமானம் தனது சேவையை தொடங்குமென்று சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் தெரிவித்துள்ளது.

பயணிகள் விமானங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், இதன்மூலம், மத்தல விமான நிலையத்துக்கும் மற்றும் அல்மாட்டிக்கும் SCAT விமானங்கள் 2023 மார்ச் 05முதல் வாரத்திற்கு ஒருமுறை தனது பயணத்தை தொடரும்.


# செலான் வங்கி பீ.எல்.சி.

(2007-07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின் கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08ஆம் பிரிவின் கீழ் 2023/01/24ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால் விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது.

**கிளை** : **கிரிபத்கொட**
**கணக்கு இலக்கம்** : **0060-13014009-108**

(2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம் P.Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பீ.எல்.சீ.இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு சஞ்சீவன் பே. வீரசிங்க என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2019 ஜனவரி 30ஆம் திகதியிடப்பட்ட 314ஆம் இலக்க பிணைமுறி கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான/அடகு வைத்தவரான" **கொட்டாஞ்சேனை**யைச் சேர்ந்த **விஸ்வநாதன் துஷாந்தன்** என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணைமுறிகளின் மீது பெறப்பட்ட வீட்டுக் கடன் வசதிக்காக 2022 ஜனவரி 07ஆம் திகதி வரை அசல் மற்றும் வட்டித் தொகையாக ஏழு மில்லியன் இருநூற்று முப்பத்தொன்பதாயிரத்து இருநூற்று எண்பத்தேழு ரூபா அறுபத்தாறு சதத் (ரூ.7,239,287.66) தொகையை மற்றும் 2022 ஜனவரி 08ஆம் திகதி தொடக்கம் ஐந்து மில்லியன் ஏழுநூற்று நாற்பத்தாறாயிரத்து அறுபத்தொரு ரூபா தொண்ணூற்றேழு சதத் (ரூ.5,746,061.97) தொகை மீது பதினேழு புள்ளி இரண்டு ஐந்து வீத (17.25%) வருடாந்த வட்டியுடன் சேர்த்து செலான் வங்கி பீ.எல்.சீக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படி தொகையான ஏழு மில்லியன் இருநூற்று முப்பத்தொன்பதாயிரத்து இருநூற்று எண்பத்தேழு ரூபா அறுபத்தாறு சதத் (ரூ.7,239,287.66) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2022 ஜனவரி 08ஆம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேல் குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும் விளம்பர செலவுகளையும் மற்றும் மேற்படி சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ் குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீயிடம் மேற்படி 314ஆம் இலக்க பிணைமுறிகளின் கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் மற்றும் அதன் வளாகங்கள் உத்தரவுபெற்ற ஏலதாரர் **திரு. துசித் கருணாரத்ன** என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபை 1990ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

**மேற்குறிப்பிடப்பட்ட ஆதன அட்டவணை:**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், தெலகந்த நுகேகொட பதிவாளர் பிரிவு சல்பிட்டி கோறளையின் பல்லேபத்துவின் பொரலஸ்கமுவ நகர சபை எல்லையில் கெஸ்பேவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. 535 பெல்லன்வில் கிராம சேவகர் பிரிவிற்குள், பெல்லன்தரவில் அமைந்திருக்கும் **"புலுகஹவத்த"** என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.டி.எதிரிவிக்ரம என்பவரால் 2007.04.07ஆம் திகதி அளவையிடப்பட்டு 2009.04.20ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2843 ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் 1B என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு (உத்தரவு பெற்ற நில அளவையாளரான எம்.எம்.எச்.பெர்னாண்டோ என்பவரால் 2001.06.07ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 426ஆம் இலக்க வரைபடத்தின் லொட் 01 என பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டின் மீள் அளவையாகும்.) மற்றும் அதிலுள்ள கட்டடங்கள், மரங்கள், பயிர்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன. **வடக்கு:** (35/96ஆம் இலக்க நில வரைபடத்தின் லொட் 01 ) மஹரகம வீதியின் வரி மதிப்பீட்டு இல. 175இன் வளாகம். இதே நில வரைபடத்தின் லொட் 01 **கிழக்கு:** இதே நில வரைபடத்தின் லொட் 01 **தெற்கு:** மஹரகம வீதி மற்றும் இதே நில வரைபடத்தின் லொட் 01 **மேற்கு:** இதே நில வரைபடத்தின் லொட் 01A ஆகிய எல்லைகளைக்கொண்ட குறித்த லொட் 1B எனக் காட்டப்படும் காணியின் பரப்பளவானது ஆறு புள்ளி ஒன்பது பேர்ச் (ஏ.0-றூ.0-பே.6.9) ஆகும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி:**
**திருமதி) லீ.ஏ.பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்**

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, பெப்ரவரி 23ஆம் திகதி, வியாழக்கிழமை

# மக்கள் மன்றத்தில் ஒரு நாள் ரணிலுக்குக் கிடைக்கும் பதில்

**''நாட்டின் அடிப்படைப் பிரச்சினை பொருளாதாரப் பிரச்சினையாகும். அதை நோக்காகக் கொண்டே நாம் செயற்பட வேண்டும். அது இல்லாமல், இந்தப் பிரச்சினையை மறைக்க முடியாது. எதிர்காலத்தில் நடைபெறவுள்ள தேர்தல், ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றல்ல. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் திகதி குறித்து நீதிமன்றம் முடிவெடுக்கும். ஆனால், பிரதம நீதியரசர் உள்ளிட்ட அனைத்து நீதியரசர்களும் ஒன்றாக அமர்ந்தாலும் கூட நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை, நீதிமன்றத்தில் தீர்க்கக்கூடிய ஒன்றல்ல. பொருளாதாரத்தை முன்கொண்டு செல்லும் பொறுப்பு பாராளுமன்றத்திற்கே இருக்கிறது. எனவே, 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்கப் பாடுபடவேண்டும்''**

கண்டி ஜனாதிபதி மாளிகையில் கடந்த திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்ற கண்டி மாவட்ட வர்த்தகர்கள் மற்றும் சட்டத்தரணிகளுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்த கருத்துகளே இவை.

அதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளையும் இடைநிறுத்தி உத்தரவிடுமாறு கோரி ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் விஜேசுந்தரவினால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு மீதான விசாரணை இன்று 23ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படவுள்ளது.

குறித்த மனு கடந்த 20ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது பிரதம நீதியரசர் தலைமையில் உயர் நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.துரைராஜா, ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய குழாம் விசாரணைகளை இன்றுவரை ஒத்திவைத்தது.

தேர்தல் ஒத்திவைப்பு மனு மீது உயர்நீதிமன்றம் இன்று விசாரணைகளை நடத்தவுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் கண்டியில் கூறியிருக்கும் கருத்துகள் நீதித்துறைக்கு நிறைவேற்றதிகாரம் விடுத்த மறைமுக அழுத்தமா என்று சிந்திக்க வேண்டியிருக்கிறது.

உயர்நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் நாட்டின் நிலைமை புரியாத சபை அல்ல. நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை நீதியரசர்கள் அறியாதவர்கள் அல்லர். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்ட நாள் முதல் இன்றுவரை நாட்டின் நடக்கும் அத்தனை விடயங்களையும் நீதித்துறையில் உள்ள மேற்படி மாண்புமிகு நீதியரசர்கள் அறிந்துவைத்திருப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை.

ஆனால், பிரதம நீதியரசர் உள்ளிட்ட அனைத்து நீதியரசர்களும் ஒன்றாக அமர்ந்தாலும் கூட நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை, நீதிமன்றத்தில் தீர்க்கக்கூடிய ஒன்றல்ல. பொருளாதாரத்தை முன்கொண்டுசெல்லும் பொறுப்பு பாராளுமன்றத்திற்கே இருக்கிறது என்ற ரணிலின் அறிவிப்பு சொல்லும் செய்தியென்ன? நீதிமன்றம் என்ன சொன்னாலும் நிறைவேற்றதிகாரமும் மக்கள் மேடையான நீதிமன்றமும் நீதித்துறையை விட பெரியதென்று கூறி தேர்தலை பிற்போட நீதிமன்றமும் அனுமதியளிக்கும் வகையில் அழுத்தத்தை பிரயோகிக்கிறாரா ரணில் என்ற கேள்வி தொக்கி நிற்கின்றது.

தேர்தலை நடத்தும் தேர்தல் ஆணைக்குழுவின் செயற்பாடுகள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி முன்னெடுக்கப்படலாமென கடந்த அமர்வொன்றில் உயர் நீதிமன்றம் கூறியிருந்தது. மக்கள் உரிமையை, ஜனநாயக விடயமொன்றை நடத்தும் செயற்பாட்டை இடைநிறுத்தும் அல்லது அதற்கு இடையூறு ஏற்படுத்தும் வேலையை நீதித்துறை செய்யாது என்ற மக்களின் எண்ணப்பாடு அதனூடாக தத்ரூபமாகியது. ஆனால், ஏற்கனவே தேர்தலுக்காக பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதியை தேர்தல் ஆணைக்குழுவுக்கு வழங்காத நிதியமைச்சர் ரணில், இப்போது நீதிமன்றுக்கு வகுப்பெடுக்கப் புறப்பட்டிருப்பது விசனத்திற்குரியது.

தேர்தலுக்கான முன்னெடுப்பை செய்யுமாறு நீதிமன்றம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு சொன்னாலும், அதற்கு நிதி வழங்குவதை பாராளுமன்றம் தீர்மானிக்கும் என்பது ரணிலின் கருத்து. ஏற்கனவே, நிதி இல்லாத காரணத்தினால் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த முடியாத நிலை இருப்பதை தேர்தல் ஆணைக்குழு உயர்நீதிமன்றத்திடம் அறிவித்துள்ளது. எனவே, தேர்தலை நடத்தும் செயற்பாட்டை முன்னெடுக்குமாறு நீதிமன்றம் அறிவித்தாலும், தேர்தலை நடத்த முடியாத நிலையே தொடரும். தேர்தலுக்கான நிதியை வழங்குமாறு நீதிமன்றம் சிலவேளை திறைசேரிக்கு உத்தரவிடுமாயின் ரணிலின் நிலைப்பாட்டின்படி நிறைவேற்றதிகாரமும் நீதித்துறையும் பாராளுமன்றமும் முரண்படும் நிலை வரலாம். எனவே, இப்போதைய நிலையில் நீதிமன்றம் அவ்வாறான முரண்பாட்டுக்கு செல்லாமல் இதனை நியாயமாக கையாளவே முனையும்.

நீதிமன்றம் எப்படியிருக்க வேண்டும் என்று மறைமுகமாக எச்சரிப்பதற்கு முன்னர், ஜனாதிபதியானவர் எப்படியிருக்க வேண்டும் என்பதை ரணில் காட்ட வேண்டும். நல்லாட்சிக் காலத்தில் மஹிந்த ராஜபக்ஷ பிரதமராக அப்போதைய ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டபோது, அந்த நியமனத்தையே கடாசித் தள்ளி நிறைவேற்றதிகாரத்திற்கு நீதித்துறை கொட்டு வைத்த வரலாறு ரணிலுக்குத் தெரியாததல்ல. அந்த வகையில் இப்போது நிதியை வழங்காமல் விட்டு, நீதிமன்றுக்கு ஆலோசனை கூறும் ரணிலுக்கு அப்படியான கொட்டு விரைவில் கிடைக்கப்போகிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. அது நீதிமன்றத்தால் கிடைக்குமோ, இல்லையோ நிச்சயம் மக்கள் மன்றத்தில் கிடைக்கப்போகிறது. ஆளுங்கட்சிக்கு ஆதரவில்லையென தேர்தலை ரணில் தள்ளிப்போடுவதால் ஆளுங்கட்சி மீதான அதிருப்தி மேலும் வீழ்ச்சியடையும் நிலைமையே இருக்கிறது.

# திமிங்கிலங்கள் கரை ஒதுங்குவது ஏன்?





கடந்த வாரம் 14 பைலட் திமிங்கிலங்கள் இலங்கையின் மேற்குக் கடற்கரையில் அமைந்துள்ள கற்பிட்டியில் கரை ஒதுங்கின. கடற்படைக்குழு உள்ளூர் மீனவர்களின் உதவியுடன், 11 திமிங்கிலங்கள் மீட்கப்பட்டன. ஆனால், அதில் 3 திமிங்கிலங்கள் இறந்தன என்று ஏ.எஃப்.பி. நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஏ.எஃப்.பி. செய்தி நிறுவனத்திடம் பேசிய வனவிலங்கு அதிகாரி எரந்த கமகே, “அவை (கரை ஒதுங்கிய பைலட் திமிங்கலங்கள்) மீண்டும் கரைக்கு வராதபடி ஆழமான கடலுக்குள் கொண்டு செல்ல வேண்டியிருந்தது. கடற்படையினர் அவற்றைத் தங்கள் படகுகளில் ஏற்றிச் சென்று இறக்கிவிட்டனர்” என்று கூறியுள்ளார்.

இலங்கையில் திமிங்கிலங்கள் அலைந்து திரிவது வழக்கத்திற்கு மாறானது அல்ல. 2020ஆம் ஆண்டில், பாணந்துறையின் மேற்குக் கடற்கரையில் 100க்கும் மேற்பட்ட பைலட் திமிங்கிலங்கள் கடற்கரைக்கு வந்தபோது, சமீபத்திய வரலாற்றில் மிகப்பெரிய திமிங்கல வருகையை நாடு கண்டது. அவைகளில் 3 திமிங்கிலங்கள் மீட்புப்பணியின் போது உயிரிழந்தன. 2017ஆம் ஆண்டில், சுமார் 20 பைலட் திமிங்கலங்கள் கடற்படை மற்றும் உள்ளூர் மீனவர்களால் காப்பாற்றப்படுவதற்கு முன்பு கிழக்குக் கடற்கரையில் சிக்கித் தவித்தன.

இலங்கையைத் தவிர, அவுஸ்திரேலியாவின் டாஸ்மேனியாவிலும் திமிங்கிலங்கள் பெருமளவில் கடற்கரைக்கு வந்துள்ளன. கடந்த ஆண்டு செப்டெம்பரில், 230க்கும் மேற்பட்ட பைலட் திமிங்கிலங்கள் இப்பகுதியின் மேற்குக் கடற்கரையில் கரை ஒதுங்கின. அவைகளில் 170 திமிங்கலங்கள் மீட்புப் படையினர் சம்பவ இடத்திற்கு வருவதற்கு முன்பே இறந்தன.

**திமிங்கிலம் கரை ஒதுங்குவது என்றால் என்ன? ஏன் இப்படி நடக்கிறது?**

திமிங்கிலங்கள் கரை ஒதுங்குவது என்பது பொதுவாக திமிங்கிலங்கள் கடற்கரையில் நிலத்தில் சிக்கிக் கொள்ளும் ஒரு நிகழ்வாகும். டொல்பின்கள், கடற்பன்றிகள் போன்ற மற்ற நீர்வாழ் விலங்குகளும் கடற்கரையில் ஒதுங்குகின்றன என்று அறியப்படுகின்றன. பெரும்பாலான கரை ஒதுங்கும் நிகழ்வுகள் ஒரே விலங்கு கரை ஒதுங்குவதாக இருக்கும். ஆனால், சில நேரங்களில் ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான கடல் விலங்குகளை உள்ளடக்கிய ஒரு பெரிய கூட்டமாக கரை ஒதுங்குவதும் நடக்கும்.

அரிஸ்டோட்டில் காலத்திலிருந்தே கூட்டமாக கடல் விலங்குகள் கரை ஒதுங்குவது நிகழ்ந்தாலும் அப்போது, சிக்கித் தவிக்கும் திமிங்கிலங்கள் மற்றும் டொல்பின்கள் உணவு மற்றும் எண்ணெயின் வளமான ஆதாரமாக இருந்ததால் அவை கடவுளின் பரிசாகக் கருதப்பட்டன. நிபுணர்களுக்கு அவை ஏன் நிகழ்கின்றன என்பது சரியாகத் தெரியவில்லை.

மேக்வாரி பல்கலைக்கழகத்தில் (அவுஸ்திரேலியா) கடல் பாலூட்டிகளில் நிபுணத்துவம் பெற்ற வனவிலங்கு விஞ்ஞானியான வனேசா பைரோட்டா கூறுகையில், “திமிங்கிலக் கூட்டம் கரை ஒதுங்குவது மர்மமானது. அவை ஏன் நடக்கின்றன என்று எங்களுக்குத் தெரியவில்லை. இப்பகுதியின் நிலப்பரப்பு, நோய், மனித செயற்பாடுகள் மற்றும் பெருங்கடல்களில் அதிகரித்து வரும் ‘ஒலி மாசுபாடு’ உள்ளிட்டவை கூட்டமாக அலைந்து திரிவதற்கான காரணம்” என்கிறார்.

டாஸ்மேனியா, நியூசிலாந்தின் கோல்டன் பே மற்றும் அமெரிக்காவில் உள்ள மாசசூசெட்ஸின் கேப் கோட் ஆகியவை நீர்வாழ் விலங்குகளின் கடற்கரைக்கு முக்கிய இடங்களாகும். அலை மாறுபாடுகள் காரணமாக இங்குள்ள ஆழமான இடங்கள் மேலும் விரைவாக ஆழமடைவதால், இந்தப் பகுதிகள் சிக்கித் தவிக்கும் பல நிகழ்வுகளுக்கு சாட்சியாக இருப்பதாக வனேசா பைரோட்டா விளக்குகின்றார்.

**மனித செயற்பாடுகள் எப்படி திமிங்கிலம் கரை ஒதுங்குவதற்கு காரணமாக இருக்கலாம்?**

மனிதத் தலையீடு காரணமாக பெருங்கடல்களின் ஆரோக்கியம் தொடர்ந்து மோசமடைந்து வருவதால் கூட்டமாக திமிங்கிலங்கள் கரை ஒதுங்குவது மிகவும் பொதுவானதாக மாறக்கூடும் என்று நிபுணர்கள் நம்புகின்றனர். இத்தகைய சம்பவங்களுக்கு முக்கிய காரணங்களில் ஒன்று கடல்களில் ‘ஒலி மாசுபாடு’ அதிகரிப்பதாக இருக்கலாம்.

மோங்காபே (Mongabay) வெளியிட்ட அறிக்கையின்படி, இலங்கையில் சமீபத்தில் திமிங்கலங்கள் கரை ஒதுங்கிய நிகழ்வு இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சமீபத்திய நில அதிர்வு நடவடிக்கை காரணமாக ஏற்பட்டிருக்கலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பெரிய வணிகக் கப்பல்கள், இராணுவ சொனார்கள் (Sonar) அல்லது கடல் துளையிடல் ஆகியவற்றிலிருந்து வரும் சத்தம், திமிங்கலங்கள் மற்றும் பிற கடல் விலங்குகளின் ஒலியைப் பயன்படுத்துவதற்கும், உணவைத் தேடுவதற்கும், தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் கடுமையாகப் பாதிக்கிறது என்று பல ஆய்வுகள் காட்டுகின்றன. இது அவைகளை செவிடாக்கி, திசைதிருப்பி அல்லது பயமுறுத்துவதன் மூலம் அவைகளைக் கரைக்கு விரட்டலாம்.

பைரோட்டா கூறுகையில், “சிலருக்கு, இது (ஒலி மாசுபாடு) ஒன்றுக்கொன்று பேசுவதற்கான இடத்தைக் குறைக்கும். ஒலி மாசுபாடு பெரிய சத்தமாக மாறும். மற்றவைகளுக்கு அது ஒரு திடீர் ஒலியாக இருக்கலாம். இது தனி கடல் விலங்குகளை பயமுறுத்துகிறது. இதனால், அவை ஆழத்திலிருந்து வேகமாக மேலே எழும்” என்கிறார்.

மற்றொரு காரணி, பெருங்கடல்களின் உயரும் வெப்பநிலை காரணமாக இருக்கலாம். இது இரை மற்றும் வேட்டையாடும் விநியோகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது. இதன் விளைவாக திமிங்கிலங்கள் கரைக்கு அருகில் வருகின்றன.

“திமிங்கலங்களும் டொல்பின்களும் உணவு இருக்கும் இடத்தில் அடிக்கடி பயணிக்கின்றன. கடல் வெப்பநிலை மற்றும் நீரோட்டங்கள் போன்ற சுற்றுச்சூழல் மாற்றங்கள் காரணமாக இரையின் இயக்கங்களில் ஏற்படும் மாற்றங்கள் திமிங்கலம் மற்றும் டால்பின் உணவு அமைந்துள்ள இடத்தில் ஒரு பங்குவகிக்கின்றன” என்று பைரோட்டா விளக்குகின்றார்.

**திமிங்கிலங்கள் கூட்டமாகக் கரை ஒதுங்குவதைத் தடுக்க முடியுமா?**

“திமிங்கிலங்கள் கூட்டமாகக் கரை ஒதுங்குவதைத் தடுப்பது மிகவும் கடினம். பல காரணங்களால் கரை ஒதுங்குதல் நடப்பதால், அனைத்துக்கும் பொருந்தக்கூடிய ஒரு தீர்வு வேலை செய்யாது. இருப்பினும், கடல் உயிரினங்களை பாதிக்கக்கூடிய மனித நடவடிக்கைகளைக் குறைக்க கடலில் நமது செயல்களில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வது இது போன்ற சம்பவங்கள் நடக்கும் வாய்ப்புகளை குறைக்க உதவும்” என்கிறார் பைரோட்டா.

*நன்றி - இந்தியன் எக்ஸ்பிரஸ்*

## இன்றைய நாளில்...

- 1886 – சார்ள்ஸ் மார்ட்டின் ஹோல் முதலாவது செயற்கை அலுமினியத்தை உருவாக்கினார்.
- 1905 – சிக்காகோவில் ரோட்டரி அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.
- 1927 – ஜேர்மானிய கோட்பாட்டு இயற்பியலாளர் வெர்னர் ஐசன்பர்க், தனது அறுதியின்மைக் கொள்கையை முதன்முறையாக வெளியிட்டார்.
- 1941 – புளூட்டோனியம் முதன்முறையாக உருவாக்கப்பட்டுப் பிரித்தெடுக்கப்பட்டது.


## நக்கல் நமசிவாயம்

எரிபொருள் கியூ ஆர் கோட் விரைவில் இல்லாமலாகுமெண்டு எரிசக்தி அமைச்சர் சொல்லியிருக்கிறார்... அப்படியெண்டா எரிபொருள் விலைகள கூட்டப்போறாங்கள் போலிருக்குது..!



## தவக்கால சிந்தனை

### தவக்காலமா? மனமாற்றத்தின் காலமா?



தூய ஆவியின் ஆலயமாக உள்ளத்தை, இல்லத்தை தூய்மைப்படுத்தி பிறந்த பாலகனையும் புதிய ஆண்டையும் வரவேற்ற நாம், அடுத்ததாக வரவேற்க ஆயத்தமாக உள்ளோம் தவக்காலத்தை.

ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டிட சொன்னவர் நம் பிதா. தாழ்ந்து போனவர் கெட்டுப் போவது இல்லை என்பதும், பொறுத்தார் பூமி ஆள்வார் என்பதும் ஆன்றோரின் அமுதமொழி. பிரசங்கம் கேட்கும்போதெல்லாம் அருட்தந்தையர்கள் சொல்வதைக் கேட்டு, மனம் வருந்தி மனமாற்றத்தை விதைக்கவிட்டு, முளைத்து, உலகத்து முட்செடிகள் கொத்திக் குதறிட, மனமாற்றம் மறந்துபோய்விட, மீண்டும் பழைய அணிநலன்களை அணிந்துகொண்டு வாழ்க்கை நகர்த்துவதே நம் வாடிக்கையாக மாறிவிட்டது. மனித மனம் குரங்காக மாறி பழைய வாழ்க்கையைத்தான் தேடிச் செல்கிறது.

தவக்காலம் என்பது சோதனையின் காலம். சோதனை எல்லாம் வல்லவருக்கு மட்டுமல்ல, நாம் ஒவ்வொருவரும் அதனை எதிர்கொண்டே ஆகவேண்டும். பட்டினி கிடப்பதால், வழிபாடுகளில் தவறாது கலந்துகொள்வதால் மட்டும் நாம் தவக்காலத்தை சிறப்பித்திட முடியாது. மனமாற்றத்தின் காலம் என்பதை உணர்த்திடும். மன்னிப்பை இதயத்தில் நிறுத்தி, நல்ல பண்பாட்டைக் கரத்தில் ஏந்தி, சமூகத்தில் வீறுநடை பயிலும் போது இறை ஆசிரும் இறை அன்னையின் வழிநடத்தலும் நமக்கு துணை இருந்திடும்.

# ஹொரண ஒலபொடுவ ரஜமஹா விகாரையின் நவம் மஹா பெரஹரா

## ஜனாதிபதியின் பங்களிப்புடன் ஆரம்பம்





வரலாற்றுச் சிறப்புமிக்க ஹொரண ஒலபொடுவ ரஜமஹா விகாரையின் வருடாந்த நவம் மஹா பெரஹராவின் ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் (21) பிற்பகல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்றது.

விகாரைக்கு வருகை தந்த ஜனாதிபதி, தலகல விபஸ்ஸனா தியான நிலையத்தின் தலைவர் ஒலபொடுவ ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வண. உடுவே ஹேமாலோக நாயக்க தேரரைச் சந்தித்து நலம் விசாரித்தார். அதன்பின், விகாரையின் அபிவிருத்திப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், தேரருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார். 2023 நவம் மஹா பெரஹராவை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் ஜனாதிபதி விசேட நினைவுக் குறிப்பையும் இட்டார்.

அதனையடுத்து, தாது மண்டபத்திற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மதவழிபாடுகளில் ஈடுபட்டதுடன், மகாசங்கத்தினர் பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதியை ஆசிர்வதித்தனர். நவம் மஹா பெரஹரா நிகழ்வையொட்டி, நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் ஆசிவேண்டி முப்பத்தேழு மணிநேர பிரித் உபதேசமும் விகாரையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு வருகை தந்திருந்த ஸ்ரீ சுமங்கலதர்ம பாடசாலையின் பிள்ளைகளுடன் சிநேகபூர்வ உரையாடலில் ஈடுபட்ட ஜனாதிபதி, அவர்களின் கல்வி நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ஒலபொடுவ ரஜமஹா விகாராதிபதி இத்தாலி மிலானோ நகரத்தின் லங்காராமாதிபதி ஒலபொடுவே தம்மிக தேரர் உட்பட மகாசங்கத்தினர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான ரோஹித அபேகுணவர்தன, சஞ்சீவ எதிரிமான்ன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# நிலுவையிலுள்ள சுகயீன விடுமுறைக் கொடுப்பனவை வழங்குமாறு மின்சார சபை ஊழியர்கள் கோரிக்கை

இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு வழங்கப்படாதுள்ள 2021ஆம் ஆண்டிற்கான சுகயீன விடுமுறைக் கொடுப்பனவை பெற்றுத் தருமாறு தொழிற்சங்க நிர்வாகத்தினரிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.

மின்சார சபை ஊழியர் ஒருவர் ஒரு வருடத்தில் தனக்குக் கிடைக்க வேண்டிய 21 சுகயீன விடுமுறைகளை எடுக்கவில்லை என்றால், அவருக்கு ஒரு மாத சம்பளம் கொடுப்பனவாக வழங்கப்படும்.

இருப்பினும் 2021ஆம் ஆண்டு கொரோனா தொற்று நிலைமை இருந்தபோது விசேட கொடுப்பனவு வழங்கப்பட்டபோதிலும் சுகயீன விடுமுறைக் கொடுப்பனவு இன்று வரை வழங்கப்படவில்லை.

கடந்த ஆண்டுக்கான (2022) விசேட கொடுப்பனவு மற்றும் சுகயீன விடுமுறை கொடுப்பனவும் இன்றுவரை கிடைக்கவில்லையென மின்சார சபை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

ஊழியர்களின் கோரிக்கைக்கு பணிப்பாளர்கள் சபை இன்னும் அனுமதி அளிக்கவில்லை என்றும், இது குறித்து எதிர்காலத்தில் கலந்துரையாடப்படும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

# மைத்ரியின் மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பு ஒத்திவைப்பு

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் இழப்பீடு கோரி தாக்கல் செய்துள்ள, தமக்கு எதிரான அனைத்து வழக்குகளையும் நிராகரிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தாக்கல் செய்துள்ள மேன்முறையீட்டு மனுவின் தீர்ப்பு எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலினால் பாதிகப்பட்டுள்ளவர்கள் இழப்பீடு கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன உள்ளிட்ட தரப்பினருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த வழக்கின் தீர்ப்பானது மேல் மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்றத்தில் நேற்று (22) அறிவிக்கப் படவிருந்தது.

எவ்வாறாயினும், எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி வரையில் குறித்த வழக்கின் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

# துப்பாக்கி, தோட்டாக்களுடன் களுத்துறையில் ஒருவர் கைது

களுத்துறை தெற்கு சுற்றுலா விடுதி ஒன்றில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கி, தோட்டாக்கள் அடங்கிய மகசீன் மற்றும் 09 மி.மீ. தோட்டாக்களுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கட்டுகுருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாமின் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். சந்தேகநபர் தங்கியிருந்த இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, 187 மதன மோதக மாத்திரைகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர் களுத்துறை வடக்கில் வசிக்கும் 30 வயதுடையவர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன், தெற்கு களுத்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.







களனி பல்கலைக்கழகத்தின் மக்கள் தொடர்பாடல், ஊடக முகாமைத்துவ டிப்ளோமா மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்களின் ஏற்பாட்டில் துறைமுக நகரை அண்டிய காலிமுகத்திடல் கடற்கரைப் பகுதி அண்மையில் சுத்தம் செய்யப்பட்டது. (பேருவளை பீ.எம்.முக்தார்)

## 22.02.2023 நாணய மாற்று வீதம்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 132 5363 | 143 1321 |
| கனேடியன் டொலர் | 152 4565 | 163 0557 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 40 0254 | 43 0148 |
| யூரோ | 27 0382 | 283 88 8 |
| ஜப்பான் யென் | 1 5354 | 1 6368 |
| சிங்கப்பூர் டொலர் | 155 34 2 | 165 6687 |
| ஸ்ரேலிங் பவுன் | 322 3241 | 337 5062 |
| சுவிஸ் பிரான்ங் | 273 05 6 | 3 0 102 |
| ஐ.அ.டொலர் | 248 2465 | 257 5 52 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848 14 6 |
| குவைட் | குவைட் தினார் | 0,068 7072 |
| ஓமான் | ஓமான் றியால் | 828 2206 |
| கட்டார் | கட்டார் றியால் | 88 0082 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85 3101 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87 3511 |

# கொரிய குடியரசின் தூதுவர் சபாநாயகருடன் சந்திப்பு






கொரிய குடியரசின் இலங்கைக்கான தூதுவர் வூஜின் ஜியோங் (Woonjin Jeong) தலைமையிலான கொரியாவின் புசான் பெருநகர சபையின் (Busan Metropolitan City Council) 13 பேர் அடங்கிய தூதுக்குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்தில் அண்மையில் சந்தித்தனர்.

புசான் நகரில் நடத்த எதிர்பார்க்கும் 2030 உலகக் கண்காட்சி (2030 World Expo) தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இலங்கை - கொரிய பாராளுமன்ற நட்புறவுச் சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், பாராளுமன்ற உறுப்பினர்களான யதாமினி குணவர்தன, கருணாதாச கொடிதுவக்கு மற்றும் பதவியணித் தலைமை அதிகாரியும், பாராளுமன்றப் பிரதிச் செயலாளர் நாயகமுமான குஷானி ரோஹணதீர ஆகியோர் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# இரண்டு நாட்களாக தேங்கிக் கிடக்கும் யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவக் கழிவுகள்

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் வெளியேற்றப்படாது கடந்த இரண்டு நாட்களாக தேங்கிக் கிடப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் தெல்லிப்பழை வைத்தியசாலையில் எரியூட்டப்பட்டுவந்த நிலையில், தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக தெல்லிப்பழையில் மருத்துவக் கழிவுகளை எரிப்பதற்கான செயற்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கனவே, யாழ்ப்பாண வைத்தியசாலை நிர்வாகத்தினரால் யாழ். நகரை அண்டிய கோம்பயன் மணல் பகுதியில் யாழ். மாநகர சபையின் அனுமதியுடன் மருத்துவக் கழிவுகளை எரியூட்டும் தொகுதியினை நிறுவுவதற்காக யாழ்ப்பாண மாநகர சபையுடன் ஓர் உடன்படிக்கை முன்னெடுக்கப்பட்டது.

அது செயற்படுத்த தயாராக இருந்த நிலையில், மாகாண உயர் அதிகாரி ஒருவரின் தலையீட்டால் குறித்த கோம்பயன் மணல் இந்து மயானத்தில் மருத்துவக் கழிவுகளை எரியூட்ட அனுமதிக்க முடியாது என குறித்த விடயம் தடைப்பட்டது.

இந்நிலையில், கடந்த இரண்டு நாட்களாக யாழ். போதனா வைத்தியசாலையின் மருத்துவக் கழிவுகள் வெளியேற்றப்படாது லொறிகளில் ஏற்றப்பட்டு, வைத்தியசாலை வளாகத்தில் தேங்கிக் கிடப்பதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

செவ்வாய்க்கிழமை 2023.02.21

உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5038
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 36,149,100.00
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 0 4 6 7 9 4

**கொவிசெத**
சීட්ටිழுப்பு இலக்கம்: 3280
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 80,653,519.20
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 29 56 61 76

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1493
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 11,101,294.80
வெற்றி இலக்கினம்: சிம்ம
வெற்றி இலக்கங்கள்: 7 1 2 4 2 0

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1068
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 84,602,606.80
ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 12 13 24 44

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 347
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,627,606.00
வெற்றி இலக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 01 08 23 54
விசேட இலக்கினம்: தனுசு

**ராசி சுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 347
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,627,606.00
வெற்றி இலக்கினம்: தனுசு
வெற்றி இலக்கங்கள்: 01 08 23 54
விசேட இலக்கினம்: தனுசு

# யாழ். போதனா வைத்தியசாலையின் கிருமித்தொற்று அழிக்கப்பட்டதால் மக்கள் பயப்படத் தேவையில்லை

## மருத்துவமனை பணிப்பாளர் யமுனாநந்தா தெரிவிப்பு

( வட்டுக்கோட்டை நிருபர்)

யாழ். போதனா வைத்தியசாலை குடிநீரில் ஏற்பட்ட கிருமித்தொற்று இனங்காணப்பட்டு தற்பொழுது அழிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் பயப்படத் தேவையில்லையென யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்தியசாலை குடிநீரில் ஏற்பட்ட கிருமித்தொற்று தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண போதனா வைத்திய சாலையிலிருந்து மலசலக்கழிவு மற்றும் ஏனைய கழிவு நீரானது சுத்திகரிக்கப்பட்டு பண்ணைக் கடலினுள் செலுத்தப்படுகின்றன. இது கடந்த 20 வருடங்களாக நடைபெற்று வருகின்ற ஒரு செயல்முறையாகும்.

ஆனால், தொழில்நுட்ப வேலைகளில் ஏற்பட்ட தடங்கல் நிலை காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக இந்த வேலைகளில் சில இடர்பாடுகள் ஏற்பட்டன.



குறிப்பாக, பண்ணை பகுதியில் இந்த நீரை அனுப்பும் இடத்தில் நீர்க்கசிவு ஏற்பட்ட நிலையில், பொதுமக்கள் மூலமாக தெரியப்படுத்தப்பட்டு, அந்த விடயம் தொடர்பில் ஆராய்ந்து அதிலுள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்திருந்தோம்.

இதன் காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து வெளியேறும் கழிவுகள் வெளியேறாமல் தடுக்கப்பட்டன. இதன் காரணமாக யாழ்ப்பாண வைத்தியசாலையில் வெளியேற்றப்பட வேண்டிய கழிவுநீரின் அளவு அதிகரித்திருந்தது.

வைத்தியசாலையில் உணவுத் தேவைக்கு மற்றும் ஏனைய தேவைகளுக்கு இரண்டு வகையான நீரை பயன்படுத்துகின்றோம். வைத்தியசாலையில் மூன்று கிணறுகளில் இருந்து இறைக்கப்படும் நீர் வைத்தியசாலை பொது தேவைக்குப் பயன்படுத்தப்படும்.

குறிப்பாக, நீருக்கு கட்டாயமாக குளோரின் இட்டு அதனை பாவித்து வந்தோம். ஆனால், இந்தக் கழிவுநீர் வெளியேற்றம் திருத்தவேலைகள் காரணமாக தடைப்பட்டிருந்தபோது சடுதியாக நில நீர்மட்டத்தில் கழிவுநீரின் தன்மை அதிகரித்ததினால் கிணற்றில் அதிகளவு கழிவுநீர் உள்ள கிருமிகள் சென்றதன் வெளிப்பாடாக, யாழ்ப்பாண வைத்தியசாலையில் கடமை புரிகின்ற உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், சத்திர சிகிச்சைகூட உத்தியோகத்தர்கள், விடுதியில் கடமையாற்றுகிறவர்கள் வயிற்றோட்ட நோயால் பாதிக்கப்பட்டார்கள்.

இது எமக்கு உடனடியாக தெரியவந்த நிலையில், கடந்த சனிக்கிழமை உடனடியாகவே அந்த கிணற்றுநீரை பரிசோதனைக்காக அனுப்பினோம். அதுபோல் மேலதிக குளோரின் இட்டு கிருமித்தொற்று கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இதன்போது ஆய்வுகூடத்தில் ஒருவகை பக்டீரியா காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. மிகையான குளோரின் ஊட்டத்தின் மூலம் இந்தக் கிருமிகள் அழிக்கப்பட்டன.

தற்போது கிருமித்தொற்று நிலைமை சுமுகமாகியது. இது தற்காலிகமாக ஏற்பட்ட ஒரு பிரச்சினையே தவிர, திட்டமிடப்பட்ட விடயம் அல்ல. இந்த விடயங்கள் அனைத்தும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நீர்த் தொற்றின் காரணமாக மருத்துவ நிபுணர்கள், தாதியர்கள் மற்றும் ஏனைய வைத்தியசாலையின் சுகாதார உதவியாளர்கள், உத்தியோகத்தர்கள் உட்பட 400 பேர் பாதிக்கப்பட்டிருந்தார்கள். சுமார் 50 பேர் அளவில் விடுதிகளில் தங்கி சிகிச்சைபெற்று வெளியேறியுள்ளார்கள்.

எனினும் தற்பொழுது அந்த குடிநீரில் ஏற்பட்ட கிருமித்தொற்று இனங் காணப்பட்டு, அது அழிக்கப்பட்டுள்ளது. எனவே பொதுமக்கள் பயப்படத் தேவையில்லை எனவும் தெரிவித்தார்.

# பன்றிகள் கடத்தல்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை ரஜவக கொடகும்புர பகுதியில் உள்ள பன்றிப் பண்ணையில் காவலுக்கு இருந்த கணவன் மனைவியை கட்டிப்போட்டு 47 பன்றிகளை கடத்திச் சென்ற சம்பவம் ஒன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

திருடர்கள், கணவனை மரமொன்றில் கட்டி வைத்தும் அவரது மனைவியை அறையொன்றில் கட்டி பூட்டி வைத்தும் இரண்டு லொறிகளில் பன்றிகளைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கொழுந்து ஏற்றிச் சென்ற ட்ரெக்டர் பாரிய பள்ளத்தில் வீழ்ந்து விபத்து

## தொழிலாளியொருவர் பலி; நால்வருக்கு காயம்
## பலாங்கொடை நொன்பேரியல் தோட்டத்தில் துயரம்

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை நொன்பேரியல் தோட்டத்தில் தேயிலைக்கொழுந்து ஏற்றிச் சென்ற ட்ரெக்டர் ஒன்று பாரிய பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் நான்கு தொழிலாளர்கள் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தில் துரைசாமி சிவகுமார் என்ற 40 வயதான தொழிலாளியே உயிரிழந்துள்ளதாக சமனலவெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தோட்டத்துக்குச் செல்லும் பாதை குண்டும் குழியுமாக காணப்படுவதால் சமநிலை தவறி ட்ரெக்டர் விபத்துக்குள்ளாகியிருக்கலாம் என பொலிஸார் தெரிவித்தனர்.

மிகவும் மோசமான நிலையில் உள்ள இந்த வீதியை புனரமைப்பு செய்ய தோட்ட நிர்வாகமோ அரசாங்கமோ அக்கறை காட்டுவதில்லை எனவும் இதனால் அப்பாவி தோட்டத் தொழிலாளர்கள் தமது உயிர்களை இழக்கின்ற பரிதாப நிலை நிலவுவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

# 35 வருட அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு

(பதுளை செய்தியாளர்)



ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தின் தமிழ்ப்பிரிவில் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றிய திருமதி. கலையரசி யோகநாதன் தனது அறுபதாவது வயதில் ஓய்வு பெற்றுள்ளார்.

ஊவா மாகாணத்தின் பதுளை மாநகரை பிறப்பிடமாகக் கொண்ட இவர் பதுளை கலைமகள் நடராஜன், இராஜாம்பாள் தம்பதிகளின் புதல்வியாவார். தனது பள்ளி வாழ்க்கையை பதுளை உர்சலாஸ் நர்சரி பள்ளியில் ஆரம்பித்து, தொடர்ந்து பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்திலும், கண்டி மோபிரே மகளிர் கல்லூரியிலும், பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியிலும் கல்வி பயின்றார்.

இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வணிகமாணி சிறப்புப் பட்டத்தினையும், இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தினையும், தேசிய கல்வி நிறுவகத்தில் கல்வி முகாமைத்துவ முதுமாணி பட்டத்தினையும் பெற்றுக்கொண்டுள்ளார்.

அகில இலங்கை சமாதான நீதவானாகவும் இருக்கும் இவர், 1987ஆம் ஆண்டு பட்டதாரி ஆசிரியராக பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியினை ஆரம்பித்தார். 1999ஆம் ஆண்டு கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியெய்தி அச்சேவையில் உள்ளீர்க்கப்பட்டார். ஊவா மாகாணத்தில் இலங்கை கல்வி நிர்வாக சேவையின் தமிழ் மொழி மூலமான முதலாவது கல்வி அதிகாரி என்ற பெருமையும் இவரைச் சார்ந்ததாகும். அதனைத் தொடர்ந்து இவர் பதுளை தமிழ் மகளிர் மகா வித்தியாலயத்தில் உபஅதிபராகவும், பதுளை ஊவா ஹைலண்ட்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் அதிபராகவும் பணியாற்றினார். அதன் பின்னர் பதுளை வலயக் கல்விப் பணிமனையில் 9 வருடங்கள் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணியாற்றியுள்ளார். இவர் 2009ஆம் ஆண்டு ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக இணைந்து கொண்டார். அதனைத் தொடர்ந்து 2015 முதல் 2021 வரையான காலப்பகுதியில் ஊவா மாகாண தமிழ்க்கல்வி அமைச்சின் மேலதிகக் கல்விப் பணிப்பாளராக தொடர்ந்து பணியாற்றினார்.

இவர் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கையின் முதன்மை ஆசிரியராகவும் 15 வருடங்களுக்கும் மேலாக பணியாற்றினார். மனிதாபிமானத்துடன் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்ற இவர் பெண் தலைமைத்துவத்திற்கு ஓர் சிறந்த உதாரணமாகத் திகழ்ந்தார். மலையக கல்வி வளர்ச்சிக்காக சேவையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ள இவரை, தனது ஓய்வு காலத்தில் தன் குடும்பத்தாருடன் சிறப்புடன் வாழ கல்விச் சமூகம் வாழ்த்துகின்றது.

# மத்திய மாகாண சர்வமத சம்மேளன அமர்வு







(கண்டி செய்தியாளர்)

மத்திய மாகாண சர்வமத சம்மேளனத்தின் வருடாந்த அமர்வு கண்டி கெட்டம்பே ஓக்-ரே ஹோட்டலில் நேற்று (22) நடைபெற்றது. இந்த அமர்வில் இஸ்லாம், பௌத்த, கிருஸ்தவ மதத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

கண்டி மாவட்ட முன்னாள் அரச அதிபர் ஏ.எம்.எல்.பி. பொல்கொல்ல தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கண்டி மாவட்ட செயலாளர் சந்தன தென்னகோன், மல்வத்தை பீடத்தின் அனுநாயக்க தேரர் நியங்கொட விஜித்தசிறி உட்பட கண்டி மாத்தளை, நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த மதகுருமார் பங்கேற்றிருந்தனர்.

தேசிய சமாதான பேரவை மற்றும் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு என்பன இணைந்து இதனை ஒழுங்கு செய்திருந்தன.

நாட்டில் இன்றைய தேவையைக் கருதி இவ்வாறான சம்மேளனக் கூட்டங்கள் மற்றும் கருந்தரங்குகள் ஒழுங்கு செய்யப்படுவது அவசியம் என அங்கு கூட்டத் தொடரை ஆரம்பித்து வைத்த நியங்கொட விஜித்தசிறி தேரர் தெரிவித்தார். மேற்படி சம்மேளன அமர்வில் அமைதி, சமாதானம் தொடர்பாக பொதுமக்களை விழிப்படையச் செய்ய வேண்டும் என்றும் இதற்கு மதத் தலைவர்களின் பங்களிப்பு தவிர்க்க முடியாதது என்றும், அதற்காக சகல மதத் தலைவர்களும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

# சிறுத்தை நடமாட்டத்தால் தோட்ட மக்கள் அச்சம்

(மனூர சுதத் செல்லஹேவா)

டிக்கோயா வனராஜா தோட்டத்தில் சிறுத்தையின் நடமாட்டம் காரணமாக மக்கள் அச்சமடைந்துள்ளனர். தேயிலை மலைகளிலும் விவசாய காணிகளிலும் சிறுத்தை இருப்பதை தொழிலாளர்கள் அவதானித்துள்ளனர். இதனால் தொழிலுக்குச் செல்வதில் அச்சம் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். வீடுகளில் வளர்க்கப்படும் கோழிகளை சிறுத்தை பிடித்துச் செல்வதாகவும் மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

சிறுத்தை நடமாட்டத்தால் இரவில் வெளியில் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பசளை விலை அதிகரிப்பால் தேயிலை உற்பத்தி பாதிப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

நைட்ரஜன் அடங்கிய 50 கிலோ கிராம் பசளை மூடை ஒன்றின் விலை 17 ஆயிரத்து 500 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்படுவதால் அதனை வாங்கும் பொருளாதார வளம் இன்மையால் தேயிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அதிக தொகை பணத்தை செலவிட்டுப் பெறும் விளைச்சலால் தமக்கு நட்டம் ஏற்படுவதால் இப்பசளை பாவனையை பெரும்பாலான சிறு தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள் கைவிட்டுள்ளனர் எனவும் இதனால் பசளை இன்றி தேயிலைச் செடிகள் மஞ்சள் நிறமாகி அழிந்து வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

எனவே, வயல் நிலங்களுக்கு 10 ஆயிரம் ரூபாவுக்கு வழங்கும் யூரியா பசளைகளை தமக்கும் வழங்குமாறும் இவர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். அவ்வாறு இல்லாவிடின் தமது உற்பத்தி பாதிக்கப்பட்டு தமக்கும் நாட்டின் மொத்த தேயிலை உற்பத்திக்கும் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் என சிறு தேயிலை தோட்ட உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

# வலி. வடக்கில் மீள்குடியேற்ற மக்களுக்கான உதவிகளை மேற்கொள்ளுமாறு சர்வதேச நாடுகளிடம் கேட்டிருக்கின்றோம்

## யாழ். அரச அதிபர் சிவபாலசுந்தரன் தெரிவிப்பு



யாழ். வலி. வடக்கில் மீள்குடியிருக்கும் மக்களுக்கான உதவிகளை மேற்கொள்ளுமாறு மேற்குலக சர்வதேச நாடுகளிடமிருந்து உதவிகளை கேட்டிருக்கின்றோம் - என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணன் சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

வலி. வடக்கில் மீள்குடியேறியுள்ள மக்களின் தற்போதைய நிலைமைகள் பற்றிய தெளிவுபடுத்தும் ஊடகவியாளர்கள் சந்திப்பு நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றபோதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் செயற்பாட்டில் சிறிது சிறிதாக மக்களுடைய காணிகள் விடுவிக்கப்பட்டாலும் மாவட்ட செயலகத்திற்கு சில இடர்பாடுகள் இருக்கின்றன.

முகாம்களில் இருக்கின்றவர்களை தற்போது குடியேற்றம் செய்துவருகின்றோம். சொந்த காணிகளுக்கு உரியவர்கள் இன்னும் முழுமையாக கையேற்று உரிய பாவனைக்கு உட்படுத்தினால்தான் தொடர்ந்தும் காணிகளை விடுவிப்பதற்கு எங்களுக்கு வசதியாக இருக்கும். அந்தக் காணிகளிலிருந்து இராணுவத்தினர் வெளியேறிச் செல்கின்றபோது அங்கிருந்த கட்டிடங்களை விட்டுச் செல்கின்றனர் .

காணியின் உரியவர்கள் அங்கு போகாத காரணத்தினால் இராணுத்தினரால் நீக்கப்பட்டதன் காரணமாக அப்போது பிரச்சினை, இப்போது இல்லை. சட்டவிரோதமான செயல்கள் இடம்பெறுவதாகவும் அதிலுள்ள பெறுமதியான பொருட்கள் களவாடப்படுவதாகவும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட காணிகளை வந்து பார்த்துவிட்டுப் போவதை விடுத்து, காணியை முறையாக பயன்படுத்துவதற்கும் தங்களுடைய உடமைகளை உரிமை கோருவதற்கும் சம்பந்தப்பட்டவர்கள் முன்வந்தால்தான் தொடர்ந்து செயல்பாடுகளை முன்னெடுக்கமுடியும்.

மீள்குடியேறியவர்களுக்கு முப்பத்தெட்டாயிரம் ரூபா பணமும் வழங்கப்படும். அதற்கான நிதியும் கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்குலக சர்வதேச நாடுகளிடம் இருந்து உதவிகளைக் கேட்டிருக்கின்றோம் - என்றார்.

# வரணி-மாசேரி குருநாதர் கோவில் அலங்காரத் திருவிழா

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி -வரணி மாசேரி புராதன குருநாதர் கோவில் அலங்கார உற்சவத் திருவிழா நாளை (24) வெள்ளிக்கிழமை 10.30 மணிக்கு கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகவுள்ளது.

23ஆம் திகதி வியாழக்கிழமை கிராம சாந்தி வைரவர் உற்சவமும், மார்ச் 03 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வேட்டைத்திருவிழாவும், 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த் திருவிழாவும், 06ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவிருப்பதாக ஆலயத்தின் பிரதம பூசகர் சிவத்திரு சி.கா.கமலநாதன் தெரிவித்துள்ளார்.

# யாழில் 21 ஆயிரம் கடலட்டைகளுடன் 12 பேர் கைது

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் சாட்டி கடற்கரையை அண்மித்த பகுதிகளில் 21 ஆயிரத்து 175 கடலட்டைகளுடன் 12 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இருவேறு சம்பவங்களில் கைதுசெய்யப்பட்ட 12 பேரையும் நேற்று முன்தினம் (21) செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தியதையடுத்து 12 பேரையும் தலா 50 ஆயிரம் ரூபா சரீர பிணையில் செல்ல நீதவான் அனுமதித்தார்.

இச்சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, சட்டவிரோதமான முறையில் கடலட்டைகளை கொண்டுசெல்வதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், அப்பகுதிகளில் சோதனைகளை முன்னெடுத்தவேளை, உரிய அனுமதிகளின்றி கடலட்டைகளை கடத்திச்சென்ற குற்றத்தில் 11 சந்தேக நபர்களை கைதுசெய்ததுடன் அவர்களிடமிருந்து 9 ஆயிரத்து 875 கடலட்டைகளை மீட்டிருந்தனர்.

அதேவேளை, மற்றுமொரு இடத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையில் சந்தேக நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டதுடன், அவரிடமிருந்து 11 ஆயிரத்து 300 கடலட்டைகளையும் மீட்டிருந்தனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் அவர்களை முற்படுத்தியபோது, மன்று அவர்களை பிணையில் செல்ல அனுமதித்தது.

இதேவேளை, பருத்தித்தீவில் சீனர்களின் கடலட்டை பண்ணையில் 40 ஆயிரம் கடலட்டைகள் விடப்பட்ட நிலையில் மீண்டும் 100 கடலட்டைகளையே பிடித்தனர் எனும் செய்தி கடந்த சில தினங்களுக்கு முன்னர் வெளியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய கார் ஒன்று மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

நாவற்குழி எரிபொருள் நிரப்பு நிலைய வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையதாக கருதப்படும் காரொன்றை சாவகச்சேரி பொலிஸார் நேற்று முன்தினம் (21) செவ்வாய்க்கிழமை இரவு மீட்டுள்ளனர். கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாவற்குழியிலுள்ள தனியார் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர் ஒருவர் மீது மோட்டார்சைக்கிளில் வந்தோர் வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றிருந்தனர்.

இந்நிலையில், இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் சிசிரிவி கெமரா பதிவுகளை அடிப்படையாகக்கொண்டு குறித்த சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் காரொன்றை மீட்டுள்ளனர்.

பொலிஸாரின் சைகையை மீறி பயணித்த குறித்த காரை நாவற்குழி-கோவிலாக்கண்டிப் பகுதியில் வைத்து மீட்டிருப்பதாகவும் இதன்போது காரில் இருந்தவர்கள் தப்பித்துச் சென்றிருப்பதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# நெடுந்தீவில் வாடி எரிப்பு; 15 இலட்ச ரூபா பொருட்கள் தீக்கிரை!

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவு பகுதியில் கடற்றொழிலாளரின் வாடி விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த பாக்கியநாதர் எயுசேவியர் என்பவரின் வாடியே நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

அதன் போது வாடியினுள் இருந்த கடற்றொழில் உபகரணங்கள் உள்ளிட்ட சுமார் 15 இலட்ச ரூபா பெறுமதியான பொருட்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் நெடுந்தீவு 2ஆம் வட்டாரத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிடும் பாக்கியநாதர் எயுசேவியர் என்பவரின் வாடியே தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

# மதுபோதையில் இளம்பெண்ணை மோதியவர் தப்பியோட்டம்

யாழ். நகரிலிருந்து காரைநகரை நோக்கி மதுபோதையில் மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர், கொட்டடியிலிருந்து அருகிலுள்ள பலசரக்கு கடை ஒன்றுக்கு சைக்கிளில் வந்த இளம் குடும்பப் பெண்மீது மோதியுள்ளார்.

யாழ். கொட்டடியில் அமைந்துள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் களஞ்சியசாலைக்கு அருகாமையில் இவ்விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

அதில் காயங்களுக்குள்ளான பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மோதியவர் தனது மோட்டார்சைக்கிளை எடுத்துக்கொண்டு தப்பி ஓடியுள்ளார். இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கைதடியில் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்த இருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

தென்மராட்சி-கைதடிப் பகுதியில் சட்டவிரோதமாக அனுமதியின்றி மதுபானம் விற்பனை செய்த இருவர் சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினரால் நேற்று (22) புதன்கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதடிப் பகுதியிலுள்ள வீடு ஒன்றிலும் வர்த்தக நிலையம் ஒன்றிலும் சட்டவிரோதமாக மதுபானம் விற்பனை செய்யப்படுவதாக சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் சாவகச்சேரி மதுவரிப் பரிசோதகர் வே.ரஷிகரன் தலைமையிலான குழுவினர் குறித்த கைது நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது இருவர் கைதுசெய்யப்பட்டிருப்பதுடன், பெறுமதியான



சாராயப் போத்தல்கள் மற்றும் பியர் ரின்கள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நட்டத்தில் இயங்கும் இ.போ.ச. டிப்போக்களை தனியாருக்கு வழங்குமாறு திறைசேரி அறிவிப்பு

நட்டத்தில் இயங்கும் இலங்கை போக்குவரத்துச் சபையின் டிப்போக்களை தனியாருக்கோ அல்லது வேறு தரப்பினருக்கோ வழங்குமாறு திறைசேரி அறிவித்துள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன நேற்று முன்தினம் (21) பனாகொடவில் தெரிவித்தார்.

இந்திய கடனுதவியின் கீழ் பெறப்பட்ட 40 பஸ்களை விநியோகிக்கும் நிகழ்வு பனாகொட அசோக் லேலண்ட் நிறுவனத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறை காரணமாக 107 பஸ் டிப்போக்களில் 800 பஸ்கள் சேவையில் ஈடுபடவில்லை. இதற்காக பொதுச்சேவை ஆணைக்குழுவின் அனுமதிக்கு அமைய 1,600 சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தப்படவுள்ளனர் - என்றார்.

# இந்திய கடன் திட்டத்தில் பெற்றுக்கொண்ட 40 புதிய பஸ்கள் பொதுப் போக்குவரத்துக்கு

இந்திய கடன் திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள 40 பஸ்களை தேசிய போக்குவரத்து சேவையில் இணைத்துக்கொள்ளவுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்திய கடன் திட்டத்தில் 165 பஸ்கள் இலங்கைக்கு வழங்கப் பட்டுள்ளன.

குறித்த பஸ்களில் 40 பஸ்கள் இவ்வாறு பொதுப் போக்குவரத்து சேவையில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன், கிராமப்புறங்களில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இந்த வருடத்திற்குள் 500 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு அறிவித்துள்ளது.





**Front Office Executive**

Company: Pet Veterinary Services PVT Ltd
Location: Colombo
Email: careers@petvet.lk

**Social Media Specialist**

Company: Park Street Mews
Email: info@parkstreetmews.com

**Senior Sales Executive**

Company: Tudawe Trading Company PVT Ltd
Email: itsyouwewant@tudawetrading.com

**Billing Clerk**

Company: Harith Engineering & Company PVT Ltd
Email: harith.eng@yahoo.com

**Internship / Banking Trainees**

Bank: Commercial Bank
Web: www.combank.lk

**Local Guard Shift Supervisor (Male/Female)**

Institution: US Embassy, Colombo
Apply: https://lk.usembassy.gov/embassy/jobs

**Internal Auditor / Accounts Clerk**

Institution: Colombo YMBA
Email: admin@colomboymba.com

**Marketing Manager**

Company: Indoscan PVT Ltd
Address: Head Of Human resource, Indoscan PVT Ltd, 441/2A, 2nd Lane, Kotte Road, Rajagiriya.

**Digital Sales / Marketing Executive (Female)**

Company: KDG Global
Industry: Gem and Jewellery
Email: careers@kdgglobal.com

**Lecturers for Diploma in English**

Institution: BIMT Campus
Email: info@bimt.lk


# நான் அதிகாரத்தை தவறாக பயன்படுத்துபவன் அல்லன்!

## தான் தனிப்பட்ட ரீதியில் கிம்புலாவல வீதியோர உணவகங்களை நீக்கும் விவகாரத்தில் தலையிடவில்லை என்கிறார் அமைச்சர் பந்துல

கிம்புலாவல பிரதேசத்திலிருக்கும் வீதியோர உணவகங்களை நீக்கும் விவகாரத்தில் தான் தனிப்பட்ட ரீதியில் தலையிடவில்லை என்றும் சட்டத்தினூடாக அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் பிரகாரமே அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் (21) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கிம்புலாவல பிரதேசத்துக்குச் சென்றபோது, அதிக வாகன நெரிசலின் காரணமாக வீதியோரங்களில் அமைக்கப்பட்டுள்ள வீதியோர உணவகங்களை உடனடியாக நீக்குமாறு நான் உத்தரவிட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்படுகின்றன. நான் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துபவன் அல்லன். தற்காலிகமாக கிடைக்கும் இந்த அதிகாரத்தை மிகவும் அவதானத்துடனும், பொறுப்புடனும் கையாள்கிறேன்.

தனியார் வர்த்தக நிலையங்களை உருவாக்கிக் கொடுத்துள்ளேன். மீகொட, வெயாங்கொட, வெலிசர, நாரஹேன்பிட்டி, நுவரெலியா, தம்புத்தேகம போன்ற பிரதேசங்களில் பொருளாதார மத்திய நிலையங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறேன். வீதியோரங்களில் கடைகளை அமைப்பதற்காக தனியான வேலைத் திட்டமொன்றையும் முன்னெடுத்துள்ளேன்.

அவ்வாறிருக்கையில், வீதி முகாமைத்துவம் தொடர்பான தீர்மானங்களை எனது உத்தரவின் பேரில் அதிகாரிகள் முன்னெடுப்பதில்லை. வீதி தொடர்பான ஒழுங்குவிதிகள் குறித்து தனியான சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தின் பிரகாரம் வீதி ஒழுங்குவிதிகளுக்கு அப்பால் நிர்மாணங்களோ, கடைகளோ அமைக்கப்பட்டிருக்குமாக இருந்தால் திகதி குறிப்பிட்டு அவற்றை நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கான அதிகாரம் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதனடிப்படையிலேயே அவர்களும் செயற்படுவார்கள். அதிகாரிகள் அவர்களின் கடமைகளை நிறைவேற்றும்போது, சில சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு அரசியல் அச்சுறுத்தல்களும் பிரயோகிக்கப்படுகின்றன.

ஆனால், நான் அவ்வாறு செயற்படுபவன் அல்லன். தனிப்பட்ட அரசியல் தேவைகளுக்காக தேசியக் கொள்கையை மாற்றியமைப்பது நியாயமற்றதாகும்.

இதேவேளை, பெருந் தெருக்களிலுள்ள வாகனங்களை தரிக்கும் வசதி மற்றும் அபிவிருத்தி செய்தல், முகாமைத்துவம் தொடர்பில் வீதி அதிகாரசபையினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனை என்ற அமைச்சரவைப் பத்திரமொன்றையும் சமர்ப்பித்துள்ளதாக குறிப்பிட்டார்.

# முன்னறிவித்தலின்றி விடுமுறை எடுத்த பயிற்சி கான்ஸ்டபிள்கள் மூவர் பணிநீக்கம்

முன்னறிவித்தலின்றி விடுமுறை எடுத்த புறக்கோட்டை பொலிஸ் பிரிவின் மூன்று பயிற்சி கான்ஸ்டபிள்களை சேவையிலிருந்து விலகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஜனவரி 24, 2023 மற்றும் பெப்ரவரி 07, 2023 ஆகிய நாட்களில் முன்னறிவிப்பின்றி பணிக்கு சமுகமளிக்காத இந்த கான்ஸ்டபிள்களை சேவையிலிருந்து விலகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் கம்பஹா மற்றும் இரத்தினபுரி பிரதேசங்களில் வசிப்பவர்கள் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த உத்தரவுகள் கடந்த 20ஆம் திகதி பிறப்பிக்கப்பட்டுள்ளன

# பலப்பிட்டி ஆதார வைத்தியசாலை மருந்தக களஞ்சியத்தில் தீப்பரவல்



பலப்பிட்டிய ஆதார வைத்தியசாலையின் மருந்தக களஞ்சியத்தில் ஏற்பட்ட தீ தற்போது முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், தீப்பரவல் காரணமாக களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த மருந்துகள் எரிந்து நாசமாகியுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மின்கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டனர்.

நேற்று முன்தினம் (21) மாலை 5.45 மணியளவில் மருந்தகம் இருந்த மாடியில் புகை வெளியேறியதைத் தொடர்ந்து, வைத்தியசாலை நிர்வாகம் அம்பலாங்கொட பொலிஸாருக்கு அறிவித்து தீயைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டது.

பின்னர், காலி தீயணைப்புப் பிரிவின் உதவியுடன் தீயைக் கட்டுப்படுத்தியதோடு, பெரும்பாலான மருந்துகளைப் பாதுகாக்க முடிந்ததாக அம்பலாங்கொட பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்து காரணமாக ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் இதுவரையில் தகவல்கள் வெளியாகவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு ரூ. 4 இலட்சம் பெறுமதியான மருந்துகள் கையளிப்பு



புலம்பெயர்வாழ் அராலியின் தொப்புள்கொடி உறவுகளால் வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலைக்கு 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மருந்துப் பொருட்கள் நேற்று வழங்கப்பட்டன.

புலம்பெயர் வாழ் அராலி உறவுகளின் நிதியை ஒருங்கிணைத்து, யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் பவானந்தராஜாவால் இந்த மருந்துப் பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டன.

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் ரதினி காந்தநேசனின் தலைமையில் நடைபெற்ற இந்த கையளிப்பு நிகழ்வில், யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் பவானந்தராஜா, குறித்த உதவித்திட்டத்தை வழங்கிய நன்கொடையாளர்கள், வைத்தியசாலையின் நலன்புரிச் சங்கத்தினர், வைத்தியசாலை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மல்வானை அல்-மஹ்மூத் வித்தியாலயத்திற்கு புதிய அதிபர்



மல்வானை அல்-மஹ்மூத் மகா வித்தியாலயத்திற்கு புதிய அதிபராக எம்.எம்.எம்.ரிம்ஸான் நியமிக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா மற்றும் களனி வலய தமிழ்மொழி பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.டீ.எம்.தௌஸீரினால் கடந்த 7ஆம் திகதி அவருக்கான நியமனக் கடிதம் உத்தியோகபூர்வமாக பாடசாலை வளாகத்தில் வழங்கப்பட்டது. அதனையடுத்து புதிய அதிபர் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

கல்லொழுவை அல்-அமான் முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராக நீண்ட காலம் சேவையாற்றிய இவர், பதவி உயர்வு பெற்ற நிலையில் தற்போது மல்வானை உலஹிட்டிவல, அல்-மஹ்மூத் மகாவித்தி யாலயத்துக்கு அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அல்-மஹ்மூத் மகா வித்தியாலயத்தில் சுமார் 12 வருடங்கள் சேவையாற்றி பல அர்ப்பணிப்புகளைச் செய்து பாடசாலையை முன்னேற்றுவதற்கு வழிநடத்திச் சென்ற முன்னாள் அதிபர் எம்.ரீ.எம்.உஸ்மான் (SLPS) இடமாற்றம் பெற்றுச்செல்லவிருந்த நிலையில் திடீர் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொடகே தேசிய சாகித்திய விருது - 2023

(மருதமுனை நிருபர்)

கடந்த 25 வருடங்கள் இலங்கை இலக்கியத்தை வளர்த்தெடுக்கும் முகமாகவும், முன்னெடுத்துச் செல்லும் வகையிலும் வழங்கப்பட்டுவரும் 'கொடகே தேசிய சாகித்திய விருது' இலங்கை தமிழ் இலக்கியத்திற்கும் கடந்த 15 வருடங்களாக வழங்கப்படுகிறது.

2022ஆம் ஆண்டு தமிழில் வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதை ஆகிய நூல்களில் சிறந்தவை தெரிவுசெய்யப்பட்டு கொடகே தேசிய சாகித்திய விருது வழங்கப்படவுள்ளது.

சிங்கள - தமிழ் மொழிகளில் இன ஐக்கியத்தையும், இனங்களிடையே நல்லுறவை கௌரவிக்கும் முகமாகவும் 2022ஆம் ஆண்டு வெளிவந்த சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்ட நூல் ஒன்றுக்கும் இன ஐக்கியத்திற்கான மொழிபெயர்ப்பு நூலுக்கான கொடகே தேசிய சாகித்திய விருது வழங்கப்படவுள்ளது. மூலநூல் இலங்கையில் வெளியிடப்பட்டிருத்தல் வேண்டும்.

தெரிவுக்கு வரும் நாவல், சிறுகதை, கவிதை ஆகிய துறையில் தன் முதல் நூல் வெளியிட்ட சிறந்த படைப்பாளி ஒருவருக்கு கொடகே தேசிய சாகித்திய விருதுக்கான பணப்பரிசிலும், சான்றிதழும், விருதும் வழங்கப்படும். பரிசீலனைக்கு அனுப்பப்படும் நூல்கள் இலங்கையில் முதல் பதிப்பாக அச்சடிக்கப்பட்டு, பதிப்பிக்கப்பட்டு, இலங்கையில் ISBN பெற்றுக்கொண்ட நூல்களாக இருத்தல் வேண்டும். தெரிவுக்கு அனுப்பப்படும் நூல் ஒவ்வொன்றும் 49 பக்கங்களுக்கு மேலாக இருத்தல் வேண்டும்.

பரிசீலனைக்கு நூலின் மூன்று பிரதிகள் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னதாக நேரடியாகவோ, தபால் மூலமாகவோ கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

661,651,675, பீ.டீ.எஸ்.குலரத்ன மாவத்தை, கொழும்பு-10. தொடர்புக்கு மேமன்கவி - 0778681464

# 2 மில்லியன் முட்டைகள் இந்தியாவிலிருந்து இறக்குமதி



இந்தியாவிலிருந்து அடுத்தவாரம் 2 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளதாக அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் முகாமையாளர் சமீலா இந்தமல்கொட தெரிவித்துள்ளார்.

குறித்த முட்டைகளை இறக்குமதி செய் வதற்கு இலங்கையின் கால்நடை வளப் பிரிவின் அனுமதி கிடைக்கப் பெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வர்த்தகரொருவரின் 50 இலட்சம்

# பெறுமதியான தங்கச் சங்கிலி கொள்ளை

கந்தானை நாகொட பிரதேசத்தில் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரின் கழுத்தில் இருந்த ரூபா 50 இலட்சம் பெறுமதியான தங்கச் சங்கிலி திருடப்பட்டுள்ளதாக கந்தானை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீட்டுக்கு முன்பாக சுத்தம் செய்து கொண்டிருந்தபோது மோட்டார்சைக்கிளில் வந்த இருவர் இந்தக் கொள்ளைச் சம்பவத்தை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர்கள் குறித்த தகவல்கள் எதுவும் இதுவரை வெளியாகவில்லை. கந்தானை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



**அண்மையில் வெளியான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் புத்தளம் தெற்கு கல்விக் கோட்டத்திற்குட்பட்ட ஆண்டிமுனை ஸ்ரீகிருஷ்ணா ஆரம்ப பாடசாலையில் ஆறு மாணவர்கள் சித்திபெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர். படத்தில் இடமிருந்து வலமாக ஸ்ரீமுருகன் ஸ்ரீ சாரக் ஷியா (153), கமலவாசன் சுஜானி (174), விக்கினேஸ்வரன் சதுர்ஷனா (142), தியாகராஜ் அருணா (146), காளிங்கநாதன் மாதுனியா (151), காந்தரூபன் சுஜேலக்சன் (142) காணப்படுகின்றனர். இவர்களை பாடசாலை அதிபர் க.தொண்டமான், சக ஆசிரியர்கள், பெற்றோர், பழைய மாணவர் சங்கம் இணைந்து பாராட்டியுள்ளனர். (உடப்பு செய்தியாளர்)**

# இன, மத பேதமின்றி சேவையாற்றியவரின் பெயரை நூலகத்திற்கு சூட்டுவதை எதிர்ப்பது கவலையளிக்கிறது



## மு.கா.தவிசாளர் அப்துல் மஜீட் தெரிவிப்பு

(சாய்ந்தமருது நிருபர்)

இன, மத பேதமின்றி தமிழ் மக்களுக்கும் பெரும் சேவையாற்றிய முன்னாள் அமைச்சர் மர்ஹூம் ஏ.ஆர்.மன்சூரின் பெயரை கல்முனை பொது நூலகத்திற்கு சூட்டுவதை சிலர் இன ரீதியாக சிந்தித்து, எதிர்ப்பதானது மிகவும் கவலையளிக்கும் விடயமாகும் - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளரும் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வருமான ஏ.எல்.அப்துல் மஜீட் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

கல்முனைத் தொகுதியில் அவரால் மேற்கொள்ளப் பட்ட பௌதீக வள, உட்கட்டமைப்பு அபிவிருத்திகளாயினும் பாடசாலைகளின் அபிவிருத்திகளாயினும் தொழில்வாய்ப்புகள் வழங்குவதிலும் இன, மத பேதமின்றியே அவற்றை முன்னெடுத்திருந்தார் என்பது எல்லோரும் அறிந்த உண்மையாகும். அத்துடன், 1977ஆம் ஆண்டுமுதல் யாழ்ப்பாண மாவட்ட அமைச்சராகவும் 1979ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டம் உருவாக்கப்பட்டதுமுதல் அம்மாவட்டத்திற்கான அமைச்சராகவும் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவினால் நியமனம் செய்யப்பட்டிருந்த ஏ.ஆர்.மன்சூர், யுத்த மேகம் கருக்கட்டியிருந்த சவால் நிறைந்த காலப்பகுதியில் இவ்விரு மாவட்டங்களிலும் தமிழ் மக்களுக்கு அரும்பணியாற்றியிருக்கிறார் என்பது வரலாறாகும்.

இத்தகைய பின்னணியில்தான் அவர் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் ஒன்றித்து வாழ்கின்ற கல்முனை நகரில் அப்போதைய வெளிவிவகார அமைச்சரான ஏ.சி.எஸ்.ஹமீதின் அனுசரணையுடன் பொது நூலகம் ஒன்றை நிறுவி, இரு சமூகங்களினதும் கல்வி மற்றும் அறிவு விருத்திக்கு வித்திட்டிருந்தார். இவ்வாறான ஒருவரின் பெயரை அவரால் கொண்டுவரப்பட்ட நூலகத்திற்கு சூட்டுவதை கல்முனை மாநகர சபையின் சில தமிழ் உறுப்பினர்கள் எதிர்த்து, அவ்விவகாரத்தை சர்ச்சையாக்கி, இன முரண்பாட்டுக்கு தூபமிட முயற்சிப்பதானது மிகவும் கவலையளிக்கிறது.

ஏ.ஆர்.மன்சூர் ஒரு முஸ்லிம் அரசியல்வாதி என்றபோதிலும் அவர் கல்முனைத் தொகுதி வாழ் தமிழ் சமூகத்திற்கும் நேர்மையுடன் தலைமைத்துவம் வழங்கியிருந்தார் என்பதை பெருமையுடன் பறைசாற்றுகின்ற இவ்வுறுப்பினர்கள், அரசியல் நோக்கத்திற்காக நியாயமற்ற முறையில் அவரது பெயர் சூட்டலுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதானது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை விரும்பாத சக்திகள் எவையும் இதன் பின்னணியில் செயற்படுகின்றனவா என்றும் சந்தேகிக்க வேண்டியுள்ளது.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு, அதிகாரப் பகிர்வு, வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் தாயகத்தில் சுயாட்சி போன்ற விடயங்களில் தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் பரஸ்பரம் புரிந்துணர்வுடன் பயணித்து வருகின்ற சூழ்நிலையில், முஸ்லிம் காங்கிரஸின் ஆட்சி நிர்வாகத்தின் கீழுள்ள கல்முனை மாநகர சபையில் தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்கள் சிலரே ஏ.ஆர்.மன்சூரின் பெயர் சூட்டல் விவகாரத்தை வரிந்து கட்டிக்கொண்டு சர்ச்சையாக மாற்றியிருப்பதென்பது இரு சமூகங்களினதும் சார்பான கட்சிகளின் புரிந்துணர்வு செயற்பாடுகளை மழுங்கடித்துவிடும் என்பதை சம்பந்தப்பட்டோர் புரிந்துகொள்ள வேண்டும் - என்றுள்ளது.

# பிரதி ஆணையாளர் இல்லாமையால் வாகன உரிமையாளர்கள் பாதிப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

கிழக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு பிரதி ஆணையாளர் இல்லாமையால் வாகன உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டு வருவதாக விசனம் தெரிவிக்கின்றனர். மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்தின் கிழக்கு மாகாணத்திற்கான அலுவலகம் திருகோண மலையில் அமைந்துள்ளது. இருந்தபோதிலும் வாகன வருமான உத்தரவுப்பத்திரத்தை (REVENUE LICENCE) ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்குள் பெற்றுக்கொள்ளாவிட்டால் வாகன உரிமையாளர்கள் கொழும்புக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் வாகன வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு பல மாதங்கள் கடப்பதாகவும், நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சிக்கல் காரணமாக இன்னும் வாகன உரிமையாளர்கள் கடனாளியாக ஜீவனோபாயத்தை கழிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

வடக்கு மாகாண மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களத்திற்கு பிரதி ஆணையாளர் நியமிக்கப்பட்டுள்ளபோதிலும் கிழக்கு மாகாணத்திற்கு இன்னும் பிரதி ஆணையாளர் நியமிக்கப்படவில்லை எனவும் இதனால் கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னர் பெற்றுக்கொள்ள முடியாத வருமான உத்தரவுப்பத்திரத்தை பெற்றுக்கொள்வதற்கு வாகன உரிமையாளர்கள் கொழும்புக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் சம்பந்தமாக கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பீ.எஸ்.ரத்நாயக்கவிடம் கேட்டபோது, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் தான் கேள்விப்பட்டதாகவும் இவ்விடயம் தொடர்பில் கொழும்பிலுள்ள மோட்டார் வாகன திணைக்களத்திற்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாகவும் கிழக்கு மாகாணத்தில் ஏற்கனவே இருந்த நடைமுறையை பின்பற்றுமாறும், இல்லாவிட்டால் மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்கள பிரதி ஆணையாளரை நியமிக்குமாறு கோரியுள்ளதாகவும் பிரதம செயலாளர் தெரிவித்தார்.

# முஸ்லிம் கட்சிகள் மீதுள்ள நம்பிக்கையில் பாரிய வீழ்ச்சி

## முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை

(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)

எமது நாட்டில் முஸ்லிம்களின் ஜனாஸாக்கள் எரிக்கப்பட்ட நிகழ்வுக்கு பின் முஸ்லிம் கட்சிகள் மீது முஸ்லிம் மக்கள் வைத்திருந்த நம்பிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. முஸ்லிம்களின் பெரும்பான்மை வாக்குப்பலத்தை பெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸிற்கும், தேசிய காங்கிரஸ் கட்சிகளுக்கும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. நமது சமூகத்தின் புத்திஜீவிகளும், அரசியல் விமர்சகர்களும் இன்னும் விமர்சனம் செய்துகொண்டு இருக்கின்றனர் - என கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

பாலமுனை அல்-ஹிதாயா வட்டாரத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கிளைகள், இளைஞர் கிளைகள், புனரமைப்புக் கூட்டம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உயர்பீட உறுப்பினரும், பாலமுனை அமைப்பாளருமான ஏ.எல்.அலியார் தலைமையில் நடைபெற்றபோது கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது கிராம மட்டத்தில் இளைஞர்கள், மூத்தவர்கள், ஆளுமையுடையவர்களை சந்தித்து கட்சி செயற்பாடுகளை முன்னெடுத்து அதன் வளர்ச்சியில் ஈடுபடவேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சி முக்கியஸ்தர்களிடமே சில விடயங்களை தெரிவித்து வருகின்றார். இரண்டு மாதங்களுக்கு முன் தேர்தல் ஒன்றுக்கு தயாராகுங்கள் என்று சொல்லியுள்ளார். அது எந்தத் தேர்தல் என்று சொல்லவில்லை. இரண்டு மாதங்களுக்கு பின் ஐ.தே.கட்சி முக்கியஸ்தர்களை சந்தித்து அடுத்த வருடம் மக்களுக்கு வாக்குகளை பயன்படுத்தும் சந்தர்ப்பம் வழங்கப்படும் என தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு நியமன தாக்கல் நிறைவுசெய்யப்பட்டு கட்சிகளும், வேட்பாளர்களும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதுடன், தேர்தல் திணைக்களமும் தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுகொண்டிருக்கத்தக்கதாக அரசாங்கம் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தாமல் இழுத்தடிப்பு செய்யும் நடவடிக்கைகளினால் மக்களுக்கு வழங்கப்பட்ட ஜனநாயகம், அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மீறியுள்ளது.

நாட்டில் ஜனாதிபதியும், அரசாங்கத்தினரும் உள்ளூராட்சித் தேர்தல் ஒன்றுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வது தொடர்பான வர்த்தமானி வெளியிடுவதற்கு முன்பு உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கான நிதி உள்ளதா, இல்லையா என்பதனை அறிந்த பின்னர்தான் வேட்புமனு தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருக்க வேண்டும்.

ஐ.தே.கட்சியின் தவிசாளர் வஜீர அபேவர்தன உள்ளூராட்சித் தேர்தல் நடத்துவதற்கு தேர்தல் திணைக்களம் நிதி கேட்டமை தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், நாம் பாதையில் போகும்போது பிச்சைக்காரர்கள் பணம் கேட்கின்றனர். பணம் உள்ளவர்கள் கொடுக்கின்றனர். இல்லாதவர்கள் கடந்து செல்கின்றனர் எனத் தெரிவித்துள்ளார்.

தேர்தல் ஆணைக்குழு, தேர்தல் திணைக்களம் என்பன நமது நாட்டு மக்களின் ஜனநாயக, அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் முக்கிய நிறுவனங்களாகும். இவற்றை பிச்சைக்காரர்களுக்கு சமனாக பேசும் நிலைமை ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளருக்கு ஏற்பட்டுள்ளமை குறித்து கவலையடைய வேண்டி ஏற்பட்டுள்ளது - என்றார்.

# மருதமுனை றபீக்காவுக்கு சாமசிறி பட்டமளிப்பு



அகில இன நல்லுறவு ஒன்றியம் நடத்திவரும் - கல்வி, கலை, கலாசார, சமூக மற்றும் சமய விடயங்களில் அதீத ஈடுபாடு காட்டும் கல்வியியலாளர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களை கௌரவிக்கும் நிகழ்வு (2022) அண்மையில் நடைபெற்றது. இதன்போது - மருதமுனையைச் சேர்ந்த சித்தி றபீக்கா சாமசிறி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். கிழக்கிலங்கையின் அழகுக்கலை விற்பன்னரான றபீக்கா சிறந்த ஆளுமையுள்ளவரும் சிகை அலங்காரம் மற்றும் மணப்பெண் அழகுக்கலை என்பனவற்றில் சிறந்த தேர்ச்சியும் பெற்றவராவார்.



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சுமார் ஒரு வருடத்திற்கு மேலாக வைத்திய அத்தியட்சகராக கடமையாற்றிய டொக்டர் அஸாத் எம். ஹனிபாவின் சேவையை பாராட்டி, வைத்தியசாலை ஊழியர்கள் நலன்புரிச் சங்கத்தினால் ஞாபகச்சின்னம் வழங்கி அண்மையில் கௌரவிக்கப்பட்டார். இதில் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் டொக்டர் ஏ.ஜி.எம்.ஷபீ, செயலாளர் ஏ.சீ.நக்கீப் மற்றும் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்)

# உளவளம் பாதிக்கப்பட்ட பெண்களை மீட்டெடுக்கும் நிலையம் திறந்துவைப்பு!

(அபு அலா)



18 வயதுக்குட்பட்ட பால்நிலையின்மையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் இல்லத்து வன்முறையினால் மனஉளைச்சலுக்கு உள்ளாக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் கூடிக்கொண்டே செல்கிறது. அதிலிருந்து அவர்களை விடுபட வைப்பதற்கான பல முயற்சிகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம் - என்று திருமலை மாவட்ட பெண்கள் அமைப்பின் பணிப்பாளர் திருமதி பிரசாந்தினி உதயகுமார் தெரிவித்தார்.

உளவளம் பாதிக்கப்பட்டவர்களுக்கான மாவட்ட உளவள நிலையம் திறந்துவைக்கும் நிகழ்வு செவ்வாய்க்கிழமை (21) துளசிபுர நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தின் கீழ் இயங்கும் கட்டடத்தில் திறந்துவைக்கப்பட்டது. இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டிருந்தார்.

இதில் கலந்துகொண்ட அவர் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைய காலகட்டத்தில் குற்றமிழைத்தவர் மற்றும் பாதிக்கப்பட்டவருக்கிடையிலான அதிகார வேறுபாடே பால்நிலைசார் வன்முறைக்கான அடிப்படைக் காரணமாகும். இதுதவிர சமூக, மத, பண்பாட்டுக் காரணிகள், தனிப்பட்ட பழக்கங்கள் மற்றும் நடத்தைகள், பொருளாதாரக் காரணிகள், பலவீனத்தன்மை உள்ளிட்ட சூழ்நிலைசார் காரணிகளாலும் இந்நிலை அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

இந்நிலைமையிலிருந்து அவர்களை பாதுகாப்பான முறையில் மீட்டெடுக்கும் நோக்கிலேயே இந்நிலையம் திறந்துவைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, இதில் பாதிக்கப்பட்ட பெண்களை துரிதமாக அவர்களின் துயரிலிருந்து இலகு வழியில் வெளியே கொண்டுவருவதற்காக திருகோணமலை மாவட்ட 7 பிரதேச செயலகப் பிரிவின் கீழ் கடமையாற்றும் இதுதொடர்பான உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அரச உத்தியோகத்தர்களும் ஒருமித்த பங்குதாரர்களாக பணியாற்றும்போதே, சிறந்த மாற்றத்தை உருவாக்குவதுடன், ஏனையவர்களைபோன்று பாதிக்கப்பட்டவர்களையும் வாழவைக்க முடியும் - என்றார்.

இந்நிகழ்வில் கிழக்கு மாகாண ஆணையாளர் திருமதி றிஸ்வாணி றிபாஸ், உளநல வைத்திய நிபுணர் வைத்தியர் திருமதி ஹயானி ஜெயவர்தன, மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் பொறுப்பு வைத்தியர், திருமலை மாவட்ட பெண்கள் அமைப்பின் உத்தியோகத்தர்கள், திருகோணமலை மாவட்ட 7 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் துறை சார்ந்த உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் இதில் கலந்துகொண்டனர்.

# போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட தாய்மார்களுக்கு நிவாரணம்





(மட்டக்களப்பு செய்தியாளர்)

இன்றைய பொருளாதார நெருக்கடி காரணமாக போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ள மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தாய்மார்களுக்கு சுகாதார அமைச்சின் அனுசரணையுடன் சமரிடன் பேர்ஸ் சர்வதேச நிவாரண நிறுவனத்தினால் போசாக்கு பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன. சுமார் 3000 பொதிகள் வழங்கப்பட்டு வருவதாக இந்நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி எஸ்.ரமணதாஸ் தெரிவித்தார்.

இத்திட்டத்தின்கீழ் ஆரையம்பதி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைப் பிரதேசத்திற்குட்பட்ட 171 தாய்மார்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா பெறுமதியான 171 போசாக்குப் பொதிகள் புதன்கிழமை (22) பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ.உதயகுமார் தலைமையில் பணிமனையில் இடம்பெற்ற வைபவத்தின்போது வழங்கப்பட்டன.

இதன்போது பொது சுகாதாரப் பரிசோதகர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், வெளிநாட்டுப் பிரதிநிதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இப்போசாக்குப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 150 மணித்தியாலங்களைக்கொண்ட சிங்கள மட்டம்-II பயிற்சிநெறியை பூர்த்திசெய்த அரச உத்தியோகத்தர்களுக்கு அண்மையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.ஏ.அஹமட் சாபிர் பிரதம அதிதியாகவும், உதவிப் பிரதேச செயலாளர் எப்.நஹீஜா முசாபிர், கிராம நிர்வாக உத்தியோகத்தர் ஏ.எல்.ஜஃபர், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எம்.ஏ.சீ.எம்.றக்கீப், கற்பித்த ஆசிரியர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

(திராய்க்கேணி செய்தியாளர்)

காரைதீவு பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாவடிப்பள்ளி கிழக்கில் கடந்த வருடம் மார்ச் மாதத்தில் காட்டுயானைத் தாக்கம் காரணமாக ஏற்பட்ட சொத்தழிவுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்கான காசோலையை காரைதீவு பிரதேச செயலகஉதவி பிரதேச செயலாளர் எஸ்.பார்த்திபன் பாதிக்கப்பட்ட பெண் ஒருவருக்கு புதன்கிழமை (22) வழங்குவதைக் காணலாம். (மாவடிப்பள்ளி செய்தியாளர்)



# காத்தான்குடி நகரசபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

(காத்தான்குடி செய்தியாளர்)

காத்தான்குடி நகரசபையின் புதிய உறுப்பினராக ஆசிரியை ஜெசிமா திங்கட்கிழமை (20) சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டு தனது நியமனத்தை புதன்கிழமை (22) நகரசபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பரிடமிருந்து பெற்றுக்கொண்டார். வட்டார உறுப்பினர் ஒருவர் தொடர்ச்சியாக சபை அமர்வுகளில் கலந்துகொள்ளாதநிலையில், வெற்றிடமான குறிப்பிட்ட பதவியை பட்டியலில் காணப்படும் அடுத்த வேட்பாளருக்கு தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியினால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தகது.







கத்தார் சகாபாக்கள் நூலக வெளியீட்டில் கவிஞர் புதுகை சிக்கந்தர் எழுதிய 'காயங்களின் கரும்பலகை' என்ற நூல் வெளியீட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை மாலை வொண்டர் பேலஸ் ஹோட்டலில் நடைபெற்றது. கத்தார் சகாபாக்கள் நூலகத்தின் தலைவர் மணிகண்டன் ஐயப்பன் தலைமை தாங்கிய இந்நிகழ்வில் கத்தார் காயிதே மில்லத் பேரவைத் தலைவர் முஹம்மத் முஸ்தபா நூலை வெளியிட்டு வைத்தார். (மாளிகைக்காடு செய்தியாளர்)





பாலமுனை ஹில்ப் பாலர் பாடசாலைக்கு 2023 புதிய ஆண்டுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் ஏடு தொடக்க விழாவும் ஊர்வலமும் ஹில் பாலர் பாடசாலையின் தலைவரும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம்.ஜே.எம்.றிஸ்வான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாலமுனை ஹில்ப் பாலர் பாடசாலையின் நிர்வாகிகள். பள்ளிவாசல் தலைவர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

(பாலமுனை செய்தியாளர்)

# தேர்தலை நடத்தக்கோரி அரசுக்கு பாரிய அழுத்தத்தை கொடுப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதற்குத் தயார்!

## பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

(கல்லடி செய்தியாளர்)

வேட்பாளர்கள் மற்றும் தேர்தலைப் பற்றி ஆர்வமாகக் காத்துக்கொண்டிருக்கும் மக்கள் மத்தியில் சிலவேளைகளில் சலிப்புத்தன்மைகள் வரலாம். ஆனால், நாங்கள் இந்தத் தேர்தலை நடத்தக்கோரி நிச்சயமாக அரசாங்கத்துக்குப் பாரிய அழுத்தத்தைக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தயாராக இருக்கின்றோம் - என்று மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

தற்போதைய நிலையில் தேர்தல் தொடர்பான சந்திப்பு களுவாஞ்சிக்குடியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினரின் அலுவலகத்தில் புதன்கிழமை (22) இடம்பெற்றது. அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாங்கள் இந்த அழுத்தங்களைக் கொடுப்பதுடன் சேர்த்து இன்று விசேடமாக முன்வைக்க விரும்பும் கோரிக்கை என்னவென்றால், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகளும்தான் பிரதானமான கட்சிகளாக இருக்கின்றன. இந்த இரண்டு கட்சிகளுக்கும் இடையில்தான் தெற்கில்பாரிய போட்டித்தன்மை காணப்படுகின்றது. மொட்டுக் கட்சியின் நிலைப்பாட்டைப் பார்க்கின்றபோது தெற்கில் அவர்களுக்கு ஆதரவில்லை என்பது போன்றுதான் தெரிகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் மிகவும் சர்ச்சைக்கும் குழப்பத்துக்கும் மத்தியில் காணப்படுகிறது. காலையில் தேர்தல் நடக்கும் என்று ஓர் அறிவித்தல் வரும். மாலையில் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்று வரும். அடுத்தநாள் காலையில் நீதிமன்றங்களை நாடுவதாக வரும். மறுநாள் மாலை தேர்தல் ஆணைக்குழு, தேர்தல் நடத்துவதற்கு தங்களிடம் நிதியில்லை என்று நீதிமன்றத்திடம் சொல்வது போன்ற பல குழப்பமான நிலைகள் தொடர்ச்சியாக வந்துகொண்டிருக்கின்றன.

வடக்கு, கிழக்கில் மொட்டின் முகவராக செயல்படும் கப்பல், படகு, வீணை போன்ற சின்னங்களுக்கு மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்பு இருப்பதை அறியக்கூடியதாக இருக்கின்றது. காலி மாவட்டத்தில் அவர்கள் சுயேச்சைக் குழுவின் ஊடாக சில பிரதேச சபைகளில் 'புட்போல்' சின்னம், 'அன்னாசி' சின்னத்தில் களமிறக்கியுள்ளதாகவும், 'மொட்டு' சின்னம் பயன்படுத்துவது மிகக் குறைவாகக் காணப்படுவதாகவும் அறியமுடிகின்றது.

இவ்வாறான நிலையில் இன்று தெற்கின்



தலைமைத்துவம் என்று சொன்னால் அனுரகுமார திசாநாயக்கவின் கட்சியும், சஜித் பிரேமதாசவின் கட்சியும்தான் எனக் கூறுவேன். இவர்களுக்கிடையில்தான் போட்டி நடக்கும். பொதுவாக ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அனுரகுமார திசாநாயக்கவின் கட்சியை விமர்சிப்பதும், அனுரகுமார திசாநாயக்க கட்சியில் இருப்பவர்களும், வேட்பாளர்களும் சஜித் பிரேமதாசவின் கட்சியை விமர்சிப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கான காரணம், இந்த இரண்டு கட்சிகளும்தான் பிரதானமாக எதிராக போட்டியிடும் கட்சிகள்.

மொட்டு கட்சியின் வாக்கை, செல்வாக்கை இவர்கள் குறைக்க வேண்டும். அதற்காக மொட்டு கட்சியின் செயற்பாடுகளை விமர்சிப்பதை விட அவர்களுக்கிடையே தற்பொழுது போட்டித்தன்மை நிலவிக் கொண்டிருக்கின்றது. அது அரசியலில் வழமை தான். தற்பொழுது தேர்தல் நடவடிக்கைகள் ஒத்திவைத்திருக்கின்ற நிலையில், ஒரு பொது மேடையில் இந்தத் தேர்தலை நடத்த வேண்டும் என்பதை அரசாங்கத்திற்கு வலியுறுத்தும் செயல்பாட்டினை இரண்டு கட்சிகளும் சேர்ந்து செய்தால் நாங்கள் இதில் வெற்றி காணக்கூடியதாக இருக்கும் - என்றார்.

# விவசாயிகளின் அறுவடை நெல்லை வீதிகளில் உலர்த்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குக!

## பொது மக்களிடம் சம்மாந்துறை தவிசாளர் வேண்டுகோள்

(மாளிகைக்காடு செய்தியாளர்)

அம்பாறை மாவட்டத்தில் நெற்செய்கை அறுவடையை அண்மித்துள்ளதால் விவசாயிகள் தாம் அறுவடை செய்த நெல்லை உலரவிட போதிய இடமில்லாமல் திணறிக்கொண்டிருப்பதையும், வீதிகளில் நெல்லை காய வைத்திருப்பதையும் பரவலாக காணக்கூடியதாக உள்ளது. அதற்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

காலநிலை சீர்கேடு, தொழிலாளர் பற்றாக்குறை போன்ற கஷ்டங்களுக்கு மத்தியில் விவசாயிகள் தமது அறுவடையை மேற்கொண்டு கிடைத்த நெல்லை வீதிகளிலும், பொது இடங்களிலும் காய வைக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அவர்களுக்கு பொறுமை காத்து ஒத்துழைப்பு வழங்குமாறு சம்மாந்துறை பிரதேச சபை தவிசாளர் ஐ.எல்.எம்.மாஹிர் பொதுமக்களை அறிவிப்பொன்றினூடாக கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிவித்தலில், சம்மாந்துறையின் முக்கிய ஜீவனோபாய தொழிலான நெற்செய்கை தற்போது அறுவடை செய்யப்படுகின்றது. பொதுமக்களும், வாகனம் செலுத்துவோரும் இரண்டு வாரங்களுக்குப் பொறுமை காத்து விவசாயிகள் தமது நெல்லை வீதிகளில் உலர்த்துவதற்கு ஒத்துழைப்பினை வழங்குமாறு கேட்டுக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

# அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் முப்பெரும் விழா!

(வொலிவேரியன் செய்தியாளர்)

சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் பாடசாலையின் (GMMS) ஏற்பாட்டில் முப்பெரும் விழா எதிர்வரும் சனிக்கிழமை 25ஆம் திகதி மாலை 4 மணிக்கு சாய்ந்தமருது லீ மெரிடியன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பாடசாலையின் கல்விசார், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் இணைந்து ஏற்பாடுசெய்துள்ள இந்நிகழ்வு 2022ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்தல், பாடசாலைக்கான இணையத்தளம் அங்குரார்ப்பணம், ஆங்கில (Rainbow) சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வு என முப்பெரும் விழாவாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ.எம்.இல்லியாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாணக்கல்விப் பணிப்பாளர் ஏ.கனகசூரியம் பிரதம அதிதியாகவும் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹதுல் நஜீம், கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் பிரதான கணக்காளர் ஏ.எம்.எம்.ரபீக் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம்.சாஹிர், கல்முனை வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம்.ஏ.மலிக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் ஏ.சஹரூன், சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.ஆர்.முஹம்மட் நிஸ்ஸாட் ஆகியோர் அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நெல் கொள்வனவு குறித்த கலந்துரையாடல்

(கந்தளாய், கிண்ணியா செய்தியாளர்கள்)

அரச நெல் கொள்வனவு தொடர்பான விசேட கலந்துரையாடல் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் பி.எச்.என். ஜயவிக்கிரம தலைமையில் செவ்வாய்க்கிழமை (21) நடைபெற்றது.

அரச நெல் கொள்வனவு தொடர்பாக தற்பொழுது இரண்டு சுற்றுநிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் மாவட்டத்தில் நெல் கொள்வனவு தொடர்பான பொறிமுறையை எவ்வாறு மேற்கொள்வது தொடர்பான விளக்கம் இதன்போது அரசாங்க அதிபரால் பிரதேச செயலாளர் உள்ளிட்ட துறைசார் திணைக்களத் தலைவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

2022/23 பெரும்போகத்தில் கிடைக்கப்பெற்ற நெல்லை விவசாயிகளிடமிருந்து பெற்றுக் கொள்கின்ற வேலைத்திட்டத்தின்கீழ் பிரதேச செயலகங்களின் ஒருங்கிணைப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட சிறிய, நடுத்தர அரிசி ஆலை உரிமையாளர்கள் மூலமாக நெல் கொள்வனவு இடம்பெறவிருக்கின்றது.

குறித்த அரிசி ஆலை உரிமையாளர்கள் நெல்லை அரிசியாக மாற்றி பிரதேச செயலகங்களுக்கு வழங்கவேண்டும். ஜனாதிபதியின் எண்ணக் கருவுக்கமைய தெரிவுசெய்யப்பட்ட வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு ஒரு மாதத்திற்கு 10 கிலோ கிராம் அரிசி வழங்கல் என்ற அடிப்படையில் இத்திட்டம் மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

அத்துடன், சமூக நலன்புரி சபை மூலமாக மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்ற வேலைத் திட்டங்கள் தொடர்பான விடயங்கள், உணவு பாதுகாப்பு தொடர்பான முன்னேற்ற மீளாய்வு, காணி குறித்த விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கே.விஜயதாசன், திணைக்களத் தலைவர்கள் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# வெங்காயச் செய்கையாளர்கள் பாதிப்பு



(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை - குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நிலாவெளி, தாமரைக்குளம், வேலூர் முதலான பிரதேசங்களில் உள்ள விவசாயிகள் வெங்காயச் செய்கைக்குப் பதிலாக வேறு பயிர்கள் செய்வதாகவும் அதில் இலாபம் இல்லை எனவும் இதனால் வாழ்வாதாரப் பிரச்சினையை எதிர்நோக்கி வருவதாகவும் கவலை தெரிவிக்கின்றனர்.

வெங்காயச் செய்கைக்குப் பதிலாக மாற்றுப் பயிர்கள் பயிரிடும் எமக்கு யாழ்ப்பாணம் சென்று விதை வெங்காயம் எடுக்கமுடியாதுள்ளது. அதற்கான போக்குவரத்துச் செலவுகளும் அதிகமாகக் காணப்படுகின்றன. செய்கைகளுக்கு பாய்ச்சுவதற்கு யூரியா இல்லை, எண்ணெய் பசளை விலை மற்றும் கூலியாட்களுக்கான கூலி, உழவு இயந்திர உழவுக் கூலி அதிகமாகக் காணப்படுகின்றன. மேலும் தற்போது டீசலுக்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இந்நிலையில், மின்சாரத்தின் மூலம் பயிர் களுக்கு நீர் பாய்ச்சப்பட்டு வருகின்றது. அதுவும் தற்போது மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதால் எம்மால் விவசாயம் மேற்கொள்ளமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இந்நிலையில் எவ்வாறு செய்கைகளை மேற்கொள்வது என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர். எனவே, இதற்குப் பதிலாக ஏனைய பயிர்களான வெண்டி, மிளகாய், கறி மிளகாய், மரவெள்ளி, கத்தரி, பூசணிக்காய் முதலான பயிர்களை விதைத்து வருகின்றோம். இது எமது வாழ்வாதார தொழில். இதை நம்பியே எமது குடும்பங்களும் எமது பிள்ளைகளும் வாழ்ந்து வருகின்றோம். எனவே, இது சம்பந்தமான உதவிகளைச் செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

# போடியார் புலம்பல்!



**ராஜபக்ஷ குடும்பம் அரச பணத்த வரையற இல்லாமல் கொள்ளையடிச்சித்தாங்க எண்டு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா சொல்லிப்போட்டாரவு எலுவா..? என்ன அது கொள்ளையடிக்கிறவங்களுக்கு வரையற..? இனப்படுகொலய வரையற இன்றி செய்த நாசமறுவானுகள் பணத்த கொள்ளையடிக்க வரையறய பாப்பானுகளா? வன்னியில இருந்து பொதுமக்களிட நகைகளையும், புலிகளிட பணம் நகை சொத்துகளயும் சேர்த்து தென்னாபிரிக்கா தொடக்கம் ரஷ்யா வரை கொம்பனிகள நடத்தற இந்த நாய்களாலதான் இப்ப இலங்கயில வங்குறோத்தும் வந்தது.**

# கவிதைப்போட்டி

(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஊடகப்பிரிவு மற்றும் நலன்புரிச் சங்கம் ஆகியன இணைந்து கவிதைப் போட்டியொன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

சர்வதேச தாய்மொழி தினத்தை முன்னிட்டு, ''தாய்மொழி தமிழின் அருமை'' என்ற தலைப்பில் இப்போட்டி இடம்பெறவுள்ளது. 50 சொற்களுக்கு மேற்படாத மரபுக்கவிதை அல்லது நவீன கவிதையை RDHS Kalmunai எனும் முகநூல் மெசஞ்சர் ஊடாக எமக்கு அனுப்பிவைக்க முடியும். தெரிவுசெய்யப்படுகின்ற கவிதை 'அரண்' சஞ்சிகையில் வெளியிடப்படுவதோடு அரண் சஞ்சிகை வெளியீட்டு நிகழ்வில் குறித்த போட்டியாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளதாகவும் இதன் இணைப்பாளரும் அரண் சஞ்சிகையின் பிரதம ஆசிரியருமான டாக்டர் எம்.பி.ஏ.வாஜித் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அரசின் உத்தரவாத விலைக்கு அம்பாறையில் நெல் கொள்வனவு



(அட்டாளைச்சேனை, ஆலையடிவேம்பு, செய்தியாளர்கள்)

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட பெரும்போக நெற்செய்கையாளர்களிடமிருந்து அரசாங்கத்தினால் உத்தரவாத விலைக்கு நெல்லைக் கொள்வனவு செய்யும் வேலைத்திட்டம் புதன்கிழமை (22) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவின் கீழ் நெற்செய்கை மேற்கொண்ட விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு நெல் கொள்வனவு செய்யப்பட்டது.

அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட மூன்று அரிசி ஆலைகளின் மூலம் இந்நெல் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒரு கிலோ உலர்ந்த நெல் 100 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. விவசாயி ஒருவரிடமிருந்து குறைந்தபட்சம் 2 ஆயிரம் கிலோ நெல் கொள்வனவு செய்யப்படும் அதேவேளை, அதிகபட்சமாக 5 ஆயிரம் கிலோ நெல்லும் அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டு வருகின்றது.

இம்முறை அம்பாறை மாவட்டத்தில் செய்கை பண்ணப்பட்ட 81 ஆயிரம் ஹெக்டேயர் நெற்செய்கையில் சுமார் 3 இலட்சத்து 50 ஆயிரம் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவற்றுள் சுமார் 25 சதவீத அறுவடை நெல்லை அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு கொள்வனவுசெய்ய உத்தேசித்திருப்பதாகவும் அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் இதன்போது தெரிவித்தார்.

அரசாங்கத்தின் உத்தரவாத விலை நிர்ணயத்திற்கமைவாக, இம்முறை மாவட்ட விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ உலர்ந்த நெல் 100 ரூபாவிற்கு கொள்வனவு செய்யப்படவுள்ளது. இதற்கென, நெல்லின் ஈரப்பதன் 14 சதவீதத்திற்கு குறைவாக இருப்பதுடன், நெற்பதரின் அளவு 9 சதவீதத்திற்கு குறைவாகவும், இனக்கலப்பு ஆறு சதவீதத்திற்கு குறைவாகவும் காணப்பட வேண்டியதுடன், கிருமிநாசினி மற்றும் சேறு அற்றதாகவும் நெல் அமைய வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் உத்தரவாத விலைக்கு கொள்வனவு செய்யப்படும் நெல்லிலிருந்து பெறப்படும் அரசி முறையாகப் பொதி செய்யப்பட்டு வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு இலவசமாக அரசாங்கத்தின் மூலம் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார். இந்நிகழ்வின்போது அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் ரி.எம்.எம்.அன்சார், அம்பாறை மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் உள்ளிட்ட விவசாய அமைப்புகளின் முக்கியஸ்தர்கள், விவசாயிகள், துறைசார் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.





**திருகோணமலை குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் "வாசிக்கும் சமூகத்தினை உருவாக்க சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்" எனும் தொனிப்பொருளில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான போட்டி நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை (20) நடைபெற்றது. குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாரக் தலைமையில் செயலாளர் திருமதி மாலினி அசோக்குமாரின் வழிநடத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.**

(கந்தளாய் செய்தியாளர்)

# பயிர்களை துவம்சம் செய்த காட்டுயானை



(மட்டக்களப்பு செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேசத்திலுள்ள கரவெட்டி சமுர்த்தி வங்கி வளாகத்தில் அமைந்துள்ள தோட்டத்தினுள் நுழைந்த காட்டுயானை அங்கிருந்த பயிர்களை அழித்து துவம்சம் செய்துள்ளது.

சமுர்த்தி வங்கியின் வேலியை உடைத்துக்கொண்டு செவ்வாய்க்கிழமை (21) அதிகாலை உள்நுழைந்த காட்டுயானை அங்கிருந்த மரவள்ளி, வற்றாளை, பயற்றை போன்ற பயிர்களை அழித்து சேதப்படுத்தியுள்ளதாக கரவெட்டி சமுர்த்தி வங்கி முகாமையாளர் பிரியதர்சினி அசோக்குமார் தெரிவித்தார். வங்கி காவலாளி மற்றும் வங்கி ஊழியர்களால் செய்கை பண்ணப்பட்ட விவசாயத் தோட்டமே இவ்வாறு காட்டுயானையால் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

# மருந்துப் பொருட்கள் கையளிப்பு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

வன்னி ஹோப் அவுஸ்திரேலியா மற்றும் IMHO நிறுவனத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை புற்றுநோய்ப் பிரிவுக்கு மருந்துப் பொருட்கள் வெள்ளிக்கிழமை (17) கையளிக்கப்பட்டன.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதாரப் பிரச்சினை காரணமாக மருந்து தட்டுப்பாடுகள் பல்வேறு வைத்தியசாலைகளில் நிலவுகின்ற சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ப் பிரிவினால் வன்னி ஹோப் நிறுவனத்துக்கு விடுத்த விசேட வேண்டுகோளின் அடிப்படையில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சாரா பொருட்கள் நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் எம்.டி.எம்.பாரிஸினால் வைத்தியசாலை பணிப்பாளர் கலாரஞ்சனி கணேசலிங்கத்திடம் கையளிக்கப்பட்டது.

ஐக்கிய அமெரிக்க நாட்டிலுள்ள நல்லையா பவுண்டேசனின் நிதி அனுசரணையில் இப்பொருட்கள் முதல் கட்டமாக வழங்கப்பட்டன.

இந்த உதவிகள் மூலம் புற்றுநோய்ப் பிரிவுக்கு சிகிச்சைக்காக வருகின்ற நோயாளிகளுக்கு தங்குதடையின்றி சேவைகளை சிறப்பாக செய்ய முடியும் என வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வன்னி ஹோப் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் வைத்திய அதிகாரிகள் கலந்துகொண்டிருந்தனர்.



# ரஷ்யாவை போர்க்களத்தில் ஒருபோதும் வீழ்த்த முடியாது

## விளாடிமிர் புட்டின் சூளுரை

''ரஷ்யாவை ஒருபோதும் வீழ்த்த முடியாது'' என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் சூளுரைத்துள்ளார்.

இதேவேளை, ரஷ்யாவை வீழ்த்திவிடலாம் என்ற தவறான நம்பிக்கையில், அமெரிக்காவால் வழிநடத்தப்படும் நேட்டோ படைகள் உக்ரைன் போரை ஊக்குவிப்பதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

உக்ரைன் போர் ஒருவருட காலத்தை நெருங்கவுள்ள நிலையில், பாராளுமன்றத்தில் ஜனாதிபதி புட்டின் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், உள்நாட்டு மோதலை, உலகளாவிய மோதலாக மாற்ற மேற்கத்தேய நாடுகள் முயற்சிப்பதாகவும், மேற்கத்தேய நாடுகளே உக்ரைனில் மோதல் அதிகரிப்பதற்கு முழு பொறுப்பு எனவும் குற்றஞ்சாட்டினார்.

மோதலை அமைதியான முறையில், பேச்சுமூலம் தீர்க்க விரும்புவதாகவும், ஆனால், முற்றிலும் வேறான சூழல் உருவாக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

# போரில் உக்ரைனை ஒருபோதும் ரஷ்யாவால் தோற்கடிக்க முடியாது

## புட்டினுக்கு ஜோ பைடன் பதிலடி



''போர்க்களத்தில் ரஷ்யாவை தோற்கடிக்க முடியாது'' என அந்நாட்டு ஜனாதிபதி புட்டின் சூளுரைத்துள்ள நிலையில், ''உக்ரைனை ஒருபோதும் ரஷ்யாவால் வீழ்த்த முடியாது'' என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் பதிலடி கொடுத்துள்ளார்.


நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த 2022ஆம் ஆண்டு பெப்ரவரி 24ஆம் திகதி உக்ரைன் மீது ரஷ்யா போர்த் தொடுத்தது. இந்தப் போர் நாளையுடன் ஓராண்டு நிறைவடைகிறது. இதையொட்டி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் திங்களன்று (20) முன்னறிவிப்புகள் எதுவுமின்றி உக்ரைன் தலைநகர் கீவ் சென்றிருந்தார். அங்கு உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியை சந்தித்து ரூ.4,135 கோடி மதிப்பிலான ஆயுதங்களை வழங்குவதாக அறிவித்தார். அங்கிருந்து ரயில் மூலம் போலாந்து சென்ற ஜோ பைடனுக்கு சிறப்பான வரவேற்பளிக்கப்பட்டது. பின்னர் தலைநகர் வர்ஷவுக்கு (Warsaw) சென்ற பைடன், போலந்து ஜனாதிபதி Andrzej Dudaவை சந்தித்துப் பேசினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், ''உக்ரைனுக்கான அமெரிக்காவின் ஆதரவை யாராலும் அசைக்க முடியாது. முன்பை விட உறுதியாகவுள்ள உக்ரைனுக்கு நேட்டோ நாடுகள் துணை நிற்கும். போரில் உக்ரைனை ஒருபோதும் ரஷ்யாவால் தோற்கடிக்க முடியாது'' - என்றார்.

## உலக செய்திகள்

### துருக்கி - சிரியா நிலநடுக்கத்தில் பிறந்த குழந்தை:

# டிஎன்ஏ பரிசோதனைக்குப் பின் அத்தையின் கைகளில் 'அயா'



சிரியாவில் நிலநடுக்க இடிபாடுகளில் பிறந்த பெண் குழந்தை அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அக்குழந்தைக்கு பூகம்பத்தில் இறந்த தாயின் பெயரே சூட்டப்பட்டது.

துருக்கி மற்றும் சிரியாவில் கடந்த 6ஆம் திகதி ஏற்பட்ட 7.8 ரிச்டர் அளவு நிலநடுக்கத்தால் இரு நாடுகளிலும் இதுவரை 47 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ள நிலையில், திங்களன்று இரவு மீண்டும் 6.8 ரிச்டர் அளவில் மீண்டுமொரு நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்நிலநடுக்கத்தில் 8 பேர் உயிரிழந்துள்ளதுடன், 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்நிலையில் கடந்த 6ஆம் திகதி ஏற்பட்ட நிலநடுக்கத்தின்போது சிரியாவின் ஜிண்டெரிஸ் பகுதியில் ஒரு தம்பதியும், அவர்களது நான்கு குழந்தைகளும் தங்கள் அடுக்குமாக் கட்டடத்தை விட்டு வெளியேற முயன்றபோது தாம் குடியிருந்த கட்டடம் இடிந்து அவர்கள் மீது வீழ்ந்துள்ளது. இதில் பெண்ணின் உடல் அருகே பச்சிளம் பெண்குழந்தையொன்று கிடந்தது. அப்பெண் இறக்கும் தறுவாயில் இக்குழந்தையை பிரசவித்திருக்கலாம் என மீட்புக் குழுவினர் நம்புகின்றனர். அக்குழந்தை 10 மணிநேரத்திற்கு பின்னர் இடிபாடுகளிலிருந்து மீட்கப்பட்டு பின்னர் வைத்தியசாலையில் சிகிச்சைகாக சேர்க்கப்பட்டது.

குழந்தை சிகிச்சைபெற்று வந்த ப்ரின் மருத்துவமனை, 'அயா' (அயா என்றால் அரபு மொழியில் அற்புதம் என்று பொருள்) என்று அக்குழந்தைக்குப் பெயரிட்டது. இதற்கிடையில் குழந்தை அயாவை தத்தெடுக்க பலரும் விரும்புவதாக மருத்துமனை தெரிவித்தது. எனினும், குழந்தையை அதன் உறவினர்களிடம் ஒப்படைக்க விரும்புவதாக மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், குழந்தை அதன் மாமா மற்றும் அத்தையிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. குழந்தையின் மரபணு (டிஎன்ஏ) அதன் அத்தையின் டிஎன்ஏவுடன் ஒத்துப்போவதால் குழந்தை அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டதாக வைத்தியசாலை தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. குழந்தைக்கு, தாய் அப்ராவின் பெயரையே உறவினர்கள் சூட்டியுள்ளனர்.

இதுகுறித்து குழந்தையின் மாமா கலீல் தெரிவிக்கையில்,

''அப்ரா எங்கள் குழந்தைதான். எங்கள் குழந்தைக்கு அப்ராவுக்கு எந்த வேறுபாடும் இல்லை" என்றார். நிலநடுக்க இடிபாடுகளில் பிறந்த குழந்தை அதன் உறவினர்களிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்ட நிகழ்வு சிரிய மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. துருக்கி - சிரிய எல்லையில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் இருநாடுகளிலும் 47இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

# மெக்சிக்கோ பஸ் விபத்து: அகதிகள் 17பேர் பலி




அமெரிக்காவிற்கு புலம்பெயர்வதற்காக உரிய அனுமதியின்றி மெக்சிக்கோ வழியாக பஸ்ஸில் பயணித்தபோது நேரிட்ட விபத்தில் 17 பேர் உயிரிழந்தனர்.

வெனிசுலா, கொலம்பியா மற்றும் மத்திய அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த 45 பேர் தங்களின் வாழ்வாதாரத்திற்கு அமெரிக்கா செல்வதற்காக மெக்சிக்கோவின் பியூப்லா வழியாக ஆபத்தான பாதையில் பஸ் பயணம் மேற்கொண்டனர்.

அப்போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியோரம் இருந்த பாறையின்மீது மோதி விபத்திற்குள்ளாகியுள்ளது. விபத்து இடம்பெற்ற இடத்திலேயே 15 பேர் பரிதாபகரமாக உயிரிழந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மேலும் 2 பேர் உயிரிழந்தனர்.

படுகாயத்துடன் மீட்கப்பட்ட 15 பேருக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தோல்வியுடன் டென்னிஸ் வாழ்க்கைக்கு விடைகொடுத்த சானியா



டுபாய் டென்னிஸ் சம்பியன்ஷிப் போட்டியில் விளையாடிய இந்தியாவின் பிரபல டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்ஷா 20 ஆண்டுகால டென்னிஸ் வாழ்க்கைக்கு விடைகொடுத்தார்.

டுபாய் டென்னிஸ் சம்பியன்ஷிப் தொடரில் அவர் முதல் சுற்றிலேயே வெற்றி பெறத் தவறி வெளியேறினார். கடந்த 2003ஆம் ஆண்டுமுதல் தொழில்முறை டென்னிஸில் விளையாடி வந்த சானியா மிர்ஷா, தாம் டென்னிஸிலிருந்து ஓய்வுபெறப் போவதாக கடந்த ஆண்டு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தனது டென்னிஸ் வாழ்க்கையில் மகளிர் இரட்டையர் பிரிவில் 3 கிராண்ட்ஸ்லாம் (2015, 2015, 2016), கலப்பு இரட்டையரில் 3 கிராண்ட்ஸ்லாம் (2009, 2012, 2014) என 6 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்ற சானியா, கடந்த 2010ஆம் ஆண்டு பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் ஷோயிப் மாலிக்கை திருமணம் செய்துகொண்டார். இந்தத் தம்பதிக்கு ஒரு ஆண்குழந்தை உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு ஆண்டுகளின் பின் ஒருநாள் அணியில் மெத்யூஸ்




இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அஞ்சலோ மெத்யூஸ் எதிர்வரும் நியூசிலாந்து சுற்றுப்பயணத்திற்கான இலங்கை ஒருநாள் அணியில் இடம்பெற்றுள்ளார். இதன்மூலம் இரண்டு ஆண்டுகளின் பின் அவர் இலங்கை ஒருநாள் அணியில் இடம்பெற்றுள்ளார்.

இலங்கை அணி அடுத்த மாதம் நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு மிக முக்கியமான ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரின் இரு டெஸ்ட் போட்டிகளிலும், மூன்று ஒருநாள் மற்றும் மூன்று இருபதுக்கு 20 போட்டிகளிலும் ஆடவுள்ளது. இதற்கான ஒருநாள் அணியிலேயே மெத்யூஸ் இடம்பெற்றுள்ளார்.

# உலகக்கிண்ணத் தொடரின் முதல் அரையிறுதி ஆட்டம் இன்று




8ஆவது ஐ.சி.சி. மகளிர் இருபதுக்கு 20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் முதல் அரையிறுதி ஆட்டம் இன்று ஆரம்பமாகும் நிலையில், அதில் இந்திய - அவுஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் குறித்த தொடரில் குழு 'ஏ'யிலிருந்து ஆஸி. - தென்னாபிரிக்க அணிகளும், குழு 'பி'யிலிருந்து இங்கிலாந்து, இந்திய அணிகளும் அரையிறுதிக்குத் தகுதிபெற்றன. இந்நிலையில், இன்று நடைபெறும் முதல் அரையிறுதியில் இந்திய அணி, ஆஸி. அணியுடன் மோதுகிறது.

நாளை நடைபெறும் இரண்டாவது அரையிறுதியில் இங்கிலாந்து - தென்னாபிரிக்க அணிகள் மோதுகின்றன. சம்பியனை தீர்மானிக்கும் இறுதிப்போட்டி எதிர்வரும் 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# பேருவளை அல்-ஹுமைஸரா - பயாகல பண்டாரநாயக்க தேசிய பாடசாலை அணிகளுக்கிடையில் இன்று கடினபந்து கிரிக்கெட் போட்டி



களுத்துறை மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் கடினபந்து கிரிக்கெட் விளையாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் பங்களாதேஷ் உயர் ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் பேருவளை அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை மற்றும் பயாகல பண்டாரநாயக்க தேசிய பாடசாலை ஆகிய இரு பாடசாலைகளுக்கு இடையிலான கடினபந்து ஒருநாள் சுற்றுப்போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு மக்கொன சரே கடினபந்து விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகிறது.

இந்நிகழ்வின் பிரதான அதிதியாக பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் தாரிக் முஹம்மத் ஆரிபுல் இஸ்லாம் கலந்துகொள்வார். இந்த செயற்திட்டத்தின் ஒருங்கிணைப்பாளராக இளைஞர் பாராளுமன்றத்தின் வெளிவிவகார பிரதியமைச்சர் அஹ்மத் ஸாதிக் செயற்பட்டிருந்தார்.

இந்த செயற்திட்டம் மென்மேலும் வெற்றியடைவதற்கு பாடசாலைகளின் பழைய மாணவர் அமைப்பு, பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக்குழு, நலன்விரும்பிகள் மற்றும் அனுசரணை நிறுவனங்கன் ஆகியவற்றின் உதவிகளோடு களுத்துறை மாவட்டத்தில் கடினபந்து விளையாட்டுத்துறை ஊக்குவிக்கப்படுகிறதென்பது குறிப்பிடத்தக்கது.

# இந்திய கிரிக்கெட்டில் அசத்திவரும் மந்தனா

மகளிர் ரி20 போட்டிகளில் இந்திய தொடக்க ஆட்டக்காரர்களின் அதிகபட்ச ஸ்கோர்

87 - ஸ்மிருதி மந்தனா v IRE, 2023
86 - ஸ்மிருதி மந்தனா v NZ, 2019
83 - ஸ்மிருதி மந்தனா v AUS, 2018
79* - ஸ்மிருதி மந்தனா v ENG, 2022
79 - ஸ்மிருதி மந்தனா v AUS, 2022

முதல் 5 இடங்களிலும் ஸ்மிருதி மந்தனாவே முதலிடத்தில் உள்ளார்.

**அதிக அரைசதம்:**

அயர்லாந்துக்கு எதிராக ஸ்மிருதி மந்தனா தனது ரி20 சர்வதேச வாழ்க்கையில் 22ஆவது அரைசதத்தை அடித்தார். ரி20 சர்வதேச கிரிக்கெட்டில் அதிக அரைசதம் அடித்த இந்தியாவின் முதல் பெண் பேட்ஸ்மேன் மற்றும் உலகின் இரண்டாவது பெண் பேட்ஸ்மேன் என்ற பெருமையைப் பெற்றார். சர்வதேச மகளிர் ரி20 கிரிக்கெட்டில் 26 சதங்களுடன் நியூசிலாந்தின் சுசி பேட்ஸ் முதலிடத்தில் உள்ளார்

**நடப்பு உலகக்கிண்ணத்தில் மந்தனா பெற்ற ஓட்டங்கள்**

10(7), 52(41),87(56)

இதற்கப்பால் இந்தாண்டு முதல் முறையாக நடைபெறவுள்ள மகளிர் ப்ரீமியர் லீக் ரி20 கிரிக்கெட் தொடருக்கான ஏலத்தில் அதிக விலையாக 3.4 கோடியில் (இந்திய மதிப்பு) ரோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியால் மந்தனா வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற தமிழக வீரர் விக்னேஷ்



இந்தியாவின் 80ஆவது வீரராக கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றுள்ளார் சென்னையை சேர்ந்த விக்னேஷ். 2019இல் அண்ணன் விகாஷ் கிராண்ட் மாஸ்டரானதைத் தொடர்ந்து, தற்போது அவரது தம்பி விக்னேஷும் பட்டம் வென்று, கிராண்ட் மாஸ்டர் பிரதர்ஸ் ஆகியுள்ளனர்.

இவரது மூத்த சகோதரர் விகாஷ் 2019ஆம் ஆண்டு கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்றுள்ளார். இதன்மூலம் இந்தியாவின் முதல் கிராண்ட் மாஸ்டர் சகோதரர்கள் என்ற சாதனையை இவர்கள் நிகழ்த்தியுள்ளனர். ஜேர்மனியில் பேட் ஸ்விஷெனாவில் நடந்த 24ஆவது நோர்ட்வெஸ்ட் கிண்ணத்தின் இறுதிப்போட்டியில், ஜேர்மனியின் இல்ஜா ஸ்னைடரை விக்னேஷ் தோற்கடித்தார்.

இதன்மூலம் செஸ் லைவ் ரேட்டிங்கில் 2500 புள்ளிகளைத் தாண்டி இந்தியாவின் 80ஆவது கிராண்ட்மாஸ்டரானார் விக்னேஷ். அத்துடன், சென்னையைச் சேர்ந்த குகேஷ் 12ஆவது வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்று இளம் வயதில் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற முதல் இந்தியர், சர்வதேச அளவில் இரண்டாவது வீரர் என்ற சாதனையை நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7